**கவனிக்க.-** *2015.08.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1929 - 2015 අගෝස්තු මස 21 වැනි සිකුරාදා - 2015.08.21

*1929 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1260 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1276 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, புரட்டாதி மாதம் 21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஓகத்து 3.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | மாவனல்ல | மாவனல்ல வைத்தியசாலைப் பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கேகாலை |

8-505

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### உயிரியல் மருத்துவ பொறியியலாளர் (நிறைவேற்றுத் தர சேவை வகையின் தரம் III) பதவிக்காக பகிரங்க அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவியில் நிலவும் 5 வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் மத்தியில், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள், நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர். இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்

அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 6 இன்கீழ் குறிப்பிடப்பட்ட) புள்ளியிடும் திட்டத்திற்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **வேண்டப்படும் தகைமைகள் :**

(i) கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தி லிருந்து பெறப்பட்ட மின்/இலத்திரனியல் பொறியியல்/ உயிரியல் மருத்துவ பொறியியல் தொடர்பான பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ii) உடற்தகுதி.- இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்று வதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) ஏனைய தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) இவ்வறிவித்தலில் குறிப்பிட்ட விண்ணப்ப முடிவுத் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக வேண்டப்பட்ட தகைமைகள் அனைத்தையும் சகல வழிகளிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

3. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு அலுவலர்கள் வேண்டப்படுவர் ;

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் 3 வருட காலப்பகுதிக்கு தகுதிகாண் காலப்பகுதியில் அமர்த்தப்படுவர். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை இந்த 3 வருட காலப்பகுதியினுள் சித்தியடையப்படல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/2004 எனும் இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 5 வருடத்தினுள் குறித்த அலுவலர் சேவையில் இணைத்துக்கொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும் உரிய தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி ஒன்றில் சேவையில் இணைத்துக்கொண்ட அலுவலர்கள் தகுதிகாண் காலப்பகுதி யினுள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும் ;

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு உட்பட்டிருக்கும்.

4. **வயது எல்லை**.- விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **வேதன அளவுத்திட்டம்**.- இப்பதவி, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 எனும் சம்பள சுற்றறிக்கையின்படி மாதாந்தம் ரூபா 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 - 1,050 - ரூபா 53,555 எனும் சம்பள அளவுக்குரியதாகும்.

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பின்வரும் புள்ளியிடும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :-

| புள்ளி வழங்கும் தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 50 |
| அனுபவம் | 20 |
| துறை சம்பந்தமான ஆராய்ச்சிகள், வெளியீடுகள் | 25 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் செயல்திறன் | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- சகல வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்ப தாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகள் ஆகியன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தமது அடையா ளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

8. **விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்கள் 2015.09.25 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர், ''செயலாளர் (பணிப்பாளர் - நிர்வாகம் 7), சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ;

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப் பங்களை ஏ4 அளவுத்தாளினைப் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 5 வரை முதல் பக்கத்திலும் இலக்கம் 6 தொடக்கம் இலக்கம் 9 வரை இரண்டாம் பக்கத்திலுமாக விண்ணப்பப்படிவம் அமைவதுடன், விண்ணப்பதாரி தனது சொந்தக் கையெழுத்தினால் விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பப்படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனும் சொற்கள் தெளிவாக எழுதப்படல் வேண்டும் ;

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / பிரசித்த நொத்தாரிசு/சட்ட வழக்கறிஞர்/முப்படைகளின் அதிகாரம் பெற்ற அதிகாரி/மாதாந்தம் திரட்டிய சம்பளம் 22,935 ரூபா மற்றும் அதற்கு மேல் வேதனம் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி ஒன்றை வகிக்கும் அலுவலர் ஒருவர் - இவர்களில் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் ;

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள், தமது விண்ணப்பங்களை, அவர்கள் பணியாற்றும் திணைக்களங்களின் திணைக்களத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும் ;

(vi) இதிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் தொலைதல், தாமதமாதல் தொடர்பான எந்த ஒரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல் வழங்குதல்.**- தங்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் விபரங்கள் பிழையானதாக அல்லது பொய்யானதாக இருந்து அது ஆட்சேர்ப்புக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டால் உமது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும். அத்துடன் அது ஆட்சேர்ப்பின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய நடைமுறைகளுக்கமைய சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், நிறைவேற்றுத் தர சேவை வகையின் தரம் III இற்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் நிபந்தனைகள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

11. நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாமல் விடுவதற்கான அதிகாரத்தைப் பொதுச்சேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
சுகாதார அமைச்சு.

இல. 385, வண. பத்தேகம
விமலவங்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவிக்கு (பகிரங்க) ஆட்சேர்ப்பு

1. 1.1 முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் (திரு./திருமதி/செல்வி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

உதாரணம்- Mr./Mrs./Miss SILVA, A. B.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :----.

2. 2.1 முகவரி- தனிப்பட்டது (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 முகவரி- தனிப்பட்டது (சிங்களம்/தமிழில்)

2.3 முகவரி- அலுவலகம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 முகவரி- அலுவலகம் (சிங்களம்/தமிழில்) :----.

(அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ கூட்டுத்தாபனம் என்பவற்றில் பணியாற்றும் அலுவலர் அவரின் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரி மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

2.5 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளவாறு வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |

5. பால் நிலை : (ஆண்/பெண்) :----.

6. தகைமைகள் (அறிவித்தலின் பந்தி 2 இன் கீழ் உள்ள தகைமைகள்) :

6.1 கல்வித் தகைமைகள் :----.

6.2 அனுபவம் :----.

7. **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும், சரியானதும் என கௌரவமாக வெளிப்படுத்து கின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரம் பெய்யானது அல்லது பிழையானது எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அது பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு முன் அறியப்படின் எனது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும் எனவும், பதவிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8. விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் என்றும், அவர் ......................... ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.
(இறப்பர் முத்திரையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

9. **திணைக்களம்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி .................................. இத்திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில் .............................. ஆந் திகதி முதல் பணியாற்றுகின்றார். அவர் நிரந்தரமான ஓய்வூதியமுடைய/தற்காலிகமான பதவி ஒன்றினை வகிக்கின்றார். அவர் கடந்த ............................... வருட காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளாரென்றும், அவர் எவ்வகையான ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர) உள்ளாகவில்லை என்றும், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இவ்வலுவல கத்திலுள்ள பதிவேடுகளில் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது என்றும், அதன்படி அவை அனைத்தும் சரியானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும் அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்றும், ................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திகதி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(இறப்பர் முத்திரையினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

8-655

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

பாதுகாப்பு அமைச்சு

### சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவை வகுப்பின் III ஆம் தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

பாதுகாப்பு அமைச்சில் சட்ட உத்தியோகத்தர் பதவியில் ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்க்கப்படுவார்கள். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (6 ஆம் இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கிணங்க கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்வி/ தொழில்சார் தகைமைகள்.**- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி யொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) **அனுபவம்.**- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்பானக தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் (தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்த சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெறப்பட்ட காலம், திகதி மற்றும் பதவி முத்திரை தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்) ;

(iii) **உடல் தகைமைகள்.**- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதியளவிலான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **ஏனையவை :**

* இலங்கைப் பிரசையொருவராயிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையைக் கொண்டவ ராயிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் இப்பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமை களை அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
* ஆங்கில மொழித் தேர்ச்சி மேலதிக தகைமை யொன்றாகக் கருதப்படும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும். விதவைகள்/விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) நியமனம் 3 ஆண்டுகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்ட தாகும். சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க் கப்பட்டு 3 ஆண்டுகளினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/ 2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவிக்கு ஆட்சேர்க்கப் பட்டு 5 ஆண்டுகளினுள் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதற்கான மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டுமென்பதோடு, அரச கரும மொழியல்லாத மொழி மூலத்தில் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதி கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாக அமையும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவி ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 மாதச் சம்பளத்தை உடையதாகும். (2006.04.25 ஆந் திகதிய அ. நி. சு. இல. 6/2006 மற்றும் இல. எஸ்எல்-1-2006 சம்பளத் தொகுதி)

6. **கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளிகள் வழங்கும் நடைமுறையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :**

| விடயம் | அதிகபட்ச புள்ளிகள் | பெற்றுக்கொண்ட புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடைத்தாகாது |
| மேலதிக தொழில் சார் தகைமைகள் | 25 | |
| மேலதிக அனுபவம் | 25 | |
| மொழித் தேர்ச்சி | 15 | |
| கணினி அறிவு | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டுகின்ற திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

7. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்**.- கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு அனைத்து விதத்திலும் நிறைவான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கு பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**.- (i) விண்ணப்பங்கள் 2015, செத்தெம்பர் 21 (2015.09.21) ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு" எனும் முகவரிக்குக் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்களை ஏ4 அளவிலான தாளில், முதலாவது பக்கம் இல. 1 முதல் 5 வரையிலும், இரண்டாவது பக்கம் இல. 6 முதல் 8 வரையிலும் அமையக்கூடிய வகையில் தயாரித்து தாமாகவே நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது மாதம் 22,935 ரூபா ஒருங்கிணைந்த சம்பளத்தைப் பெறுகின்ற நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றுகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடனுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஒவ்வாதனவான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் தொடர்பிலான எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **பொய்யான தகவல்களை வழங்கல்**.- உங்களால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானதென்பது அல்லது தவறானதென்பது ஆட்சேர்ப்புக்கு முன்னர் அறியவருமிடத்து உங்களது விண்ணப்பதாரர் தகைமை இரத்துச் செய்யப்படும். அத்தகைய போலியான அல்லது தவறான தகவல்கள் எதுவும் ஆட்சேர்ப்பின் பின்னர் அறியவருமிடத்து அதற்கு ஏற்புடைய தான நடவடிக்கைகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புகின்ற அல்லது நிரப்பாதிருக்கின்ற உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 3,
2015, ஓகத்து 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாதுகாப்பு அமைச்சு**

சட்ட உத்தியோகத்தர் பதவி

(அலுவலக உபயோகத்துக்கு)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
Mr./Mrs./Miss.
1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப் பெயர் (தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி :----.
2.2 தொலைபேசி இலக்கம் :
நிரந்தர :----. கையடக்க :----.

3. 3.1 தேசிய இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, முஸ்லிம்கள்-3, வேறு-4) ☐

3.2 பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

3.3 விவாகம் :

| | | | |
|---|---|---|---|
| விவாகமானவர் | | விவாகமாகாதவர் | |

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.5 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.6 2015.09.21 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1 கல்வித் தகைமைகள் :

(i) பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(iii) பட்டம் :----.

4.2 தொழில் தகைமையும் அனுபவமும் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்குப் பெற்றுள்ள சித்தி :----.
(ii) உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக பெற்றுள்ள அனுபவம் :
ஆண்டுகள் :----.

5. விண்ணப்பதாரர் இதற்கு முன்னர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் தோற்றியுள்ளாரா ?
ஆம் எனின் திகதி, வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் வழங்கவும் :----.

6. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானதென அல்லது தவறானதென நான் தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டறியப்பட்டால் நான் தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

7. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது மாதம் 22,935 ரூபா ஒருங்கிணைந்த சம்பளத்தைப் பெறுகின்ற நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................. (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்பதையும், ............... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை)

**விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ளவரெனின் நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்பதையும், ........................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

அவரின் வேலைகள், வரவு மற்றும் நடத்தை .................................. எனவும் உறுதிசெய்கின்றேன். தற்பேது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
(பதவி முத்திரை)
முகவரி :----.
திகதி :----.

8-591

---

**இலங்கை வான்படை**

அரசாணையமர்வுஅலுவலர் வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ஆண்/பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :

(அ) தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு ;
(ஆ) உபகரணப் பிரிவு ;
(இ) பல் வைத்தியப் பிரிவு ;
(ஈ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு ;
(உ) பரிபாலன நீதிப் பிரிவு ;
(ஊ) பரிபாலன இசைப் பிரிவு.

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) ***தொழில்நுட்பப் பொறியியல் பிரிவு :***

*தொழில்நுட்ப பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர) :*

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர இயந்திரவியல்/மோட்டார் வாகன பொறியியல் BSc பட்டச் சான்றிதழ் அல்லது 3 வருட முழுநேர இயந்திர வியல் பொறியியலில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பெற்ற தொழில்நுட்ப சான்றிதழ் (NDT) அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிலையத்தில் (3 1/2) வருட முழுநேர இயந்திரவியல் பொறியியல் பெற்ற உயர் தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிலையத்தில் 4 வருட முழுநேர பொறியியல் விஞ்ஞானத்தில் பெற்ற உயர் தேசிய டிப்ளோமா (NDES).

(அ) ***உபகரணப் பிரிவு :***

*உணவக முகாமையாளர் - ஆண் (நிரந்தர) :*

* ஹோட்டல் முகாமைத்துவம் டிப்ளோமா பட்டச் சான்றிதழ் அல்லது தேசிய/சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தில் விருந்தோம்பல் உபசரனைக் கல்வியில் 4 தரத்திலும் முழுநேர அடிப்படை, இடை மற்றும் பயிற்சி பெற்றிருப்பதுடன் நட்சத்திர ஹோட்டலில் போசனசாலையும் உணவு முகாமைத்துவமும் சம்பந்தமாக 2 வருட அதிகாரி அனுபவம் இருத்தல் வேண்டும்.

*ஆடை தொழில்நுட்ப பொறியியலாளர் - ஆண் (நிரந்தர) :*

* தொழில்நுட்ப அல்லது பொறியியல் விஞ்ஞானத்தில் BSc பட்டம் பெற்றிருத்தல்/ ஆடையணிகள் மற்றும் உடை தொடர்பாக டிப்ளோமா பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும். ஆடையணிகலன் மற்றும் உடை தொடர்பாக 5 வருட சேவை அனுபவம் மற்றும் 3 வருடம் பயிற்றுவிப்பாளராக அல்லது அறிவுரையாளராக இருத்தல் ; ஆடையணிகளின் தயாரிப்பு மற்றும் விருத்தி செய்தலில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

* இலங்கை ஆடை மற்றும் புடவை நிறுவனத்தில் அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா இருத்தல் வேண்டும். ஆடை மற்றும் புடவை தொடர்பாக 2 வருட சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

(பட்டதாரிக்கு 33 வயதை விடவும் டிப்ளோமாதாரிக்கு 26 வயதை விடவும் 2015, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும்.)

(இ) ***பல் வைத்தியப் பிரிவு :***

*பல் அறுவை மருத்துவர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)*

* ப்ளைட் லெப்டினன்ட்- BDS அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் SLMC அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

*பல் மருத்துவ மாணவர்-ஆண்/பெண் (நிரந்தர)*

* ப்ளையின் ஒபிசர்.- இறுதி BDS முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் BDS பயிலும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

* பைலட் ஒபிசர்.- BDS 2 ஆவது பகுதியை முடிவுசெய்து 3 ஆம் வருட ஆரம்பத்தில் இருக்கும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு :

(1) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ப்ளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக்கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப் படுவார்கள்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடியும்வரை வான் படையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். பல் வைத்திய BDS பட்டத்தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் (SLMC) பதிவாகியதும் அவர்கள் ப்ளைட் லெப்டின்ட் நிலையில் நிரந்தரப்படுத்தப்படுவார்கள்.

(3) கல்வித் தொழிற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப் படும்.

(4) பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடத்தை காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப் பத்துடன் அனுப்பிவைக்கவும்.

(ஈ) ***பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு :***

*கால்நடை வைத்தியர் - ஆண் (நிரந்தர/தொண்டர்)*

* பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர கால்நடை வைத்தியப் பிரிவு BVSc பட்டச் சான்றிதழ் அல்லது இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(உ) ***பரிபாலன நீதிப் பிரிவு :***

*நீதி அதிகாரி - ஆண் (நிரந்தர)*

* நீதிப்பட்டம் பெற்றிருத்தலுடன் 1 வருட வழக்கு தொடுக்கும் அனுபவம். MOU உம் ஆவணம் தொடர்புபடுத்தும் திறமையும் ;

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் Squadron Leader/Flight Lieutenant நிலையில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(ஊ) ***பரிபாலன இசைப் பிரிவு :***

*இசைக் கலைஞர் - ஆண் (நிரந்தர)*

* *குறைந்தபட்சம் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.*

* *றோயல் கல்லூரியில் அல்லது திரித்துவக் கல்லூரியில் தரம் 5 வரை அல்லது அதற்கு மேலும் லண்டன் அல்லது அதற்குச் சமனான தகைமை இருத்தல் வேண்டும்.*

* *இசைக்குழுவில் பயிற்றுவித்தல் மற்றும் இசைக் குழுவினரோடு இணைந்து செயற்படும் ஆற்றல் மேலும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.*

*மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைக் கையாளும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.*

*அல்லது*

* *குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.*

* *இலங்கை லலித கலா நிறுவனத்தில் பெற்ற கலைப்பட்டம் அல்லது இலங்கை தேசிய நடன மற்றும் சங்கீத இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது இந்தியாவில் பாத்மகாண்ட சங்கீத பீடத்தில் இரண்டாம் தரத்தில் அல்லது விஷாராதா பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

* *மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களை பயிற்றுவிக்கும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.*

* *மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களை இசைக்கும் ஆற்றல் மேலும் சுருதி லயம் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.*

3. ***வேறு தகைமைகள் :***

(அ) ***தேசிய இனம்.*** *- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்*

(ஆ) ***குடியியல் நிலை.*** *- விவாகமானவர்/விவாகமாகாதவர்*

(இ) ***பால்.*** *- ஆண்/பெண் (தேவையைப் பொருத்து)*

(ஈ) ***வயது.*** *- 2015, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிக்கு -*

*தொழில்நுட்பப் பொறியியல், உபகரண (உணவக முகாமை யாளர்) பல் வைத்திய மாணவர்.- 18-30 வயது வரை இருத்தல் வேண்டும்.*

*பல் வைத்திய, பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு, பரிபாலன நீதிப் பிரிவு, பரிபாலன இசைப் பிரிவு.- 18-35 வரை இருத்தல் வேண்டும்.*

(உ) ***உயரம்.*** *- ஆண்கள் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்.*

(ஊ) ***பல் வைத்திய.*** *- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண்கள் 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்.*

(எ) ***நிறை.*** *- 17 < உடற்பருமன் சுட்டி < 26 (ஆண்) ; 17 < உடற்பருமன் சுட்டி < 25 (பெண்).*

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2 \text{ (மீ)}}$$

(ஏ) ***மார்பு.*** *- ஆண் 32" (குறைந்தது)*

(ஐ) ***பார்வை வர்ணப்பதிவு மட்டம்.*** - CP2

(ஒ) ***தொலைபார்வை.*** *- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) ; பல் வைத்திய பிரிவு (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்).*

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. வான்படை தளபதியால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவ தற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆகப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்துப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப் படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் நிலைகளில் பைலற் ஒபிசர்/பிளையிங் ஒபிசர்/பிளைட் லெப்டினன்ட்/ஸ்குவார்டன் லீடர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கை களுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப் படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டார். வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஈ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| பைலற் ஒபீசர் | - ரூபா 2,42,700 |
| ஃபிளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரின் | - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் (மாதமொன்றுக்கு) :

| | |
|---|---|
| தரம் II | - ரூபா 3,06,180-4 x 7,740-10 x 7,800-3 x 12,600 = ரூபா 4,52,940 |
| தரம் I | - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140 |
| விசேட பிரிவு | - ரூபா 5,08,680-12 x 17,720 = ரூபா 6,97,320 |

(இ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள் :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு) :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - 1,700 ரூபா |
| தரம் II | - 1,700 ரூபா |
| தரம் I | - 3,400 ரூபா |
| விசேட பிரிவு | - 3,400 ரூபா |

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு (மாதமொன்றுக்கு) :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - 2,125 ரூபா |
| தரம் II | - 1,700 ரூபா |
| தரம் I | - 400 ரூபா |

(3) நட்ட கொடுப்பனவு (மாதமொன்றுக்கு).- ரூபா 35,000

(4) மேலதிக வேலை கொடுப்பனவு (மணித்தியாலத்திற்கு) :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - 335 ரூபா |
| தரம் II | - 383 ரூபா |
| தரம் I | - 528 ரூபா |
| விசேட பிரிவு | - 628 ரூபா |

(5) மொழித்திறமை கொடுப்பனவு (மணித்தியாலத்திற்கு) :

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | - 795 ரூபா |
| தரம் II | - 800 ரூபா |
| தரம் I | - 1,200 ரூபா |
| விசேட பிரிவு | - 1,460 ரூபா |

(6) தேவையைப் பொருத்து பந்தி (15) (ஈ) உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்.

(ஈ) சேவைக் கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 7,800 ரூபா ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு 600 ரூபா ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,400 ;

(5) விசேட கொடுப்பனவு 3,000 ரூபா (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிக கொடுப்பனவு மாதமொன்றுக்கு 1,000 ரூபா ;

(7) சீருடை பேணுதல் படி மாதமொன்றுக்கு 255 ரூபா ;

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு 637.50 ரூபா (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு 15,167.70 ரூபா (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடிய 637.50 ரூபா வரை) ;

(11) அடிப்படைப் படியில் 20% ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டண செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ.போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும் ;

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலட் ஒபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுப்படற்பாலனவாகும் ;

(18) சேவை கொடுப்பனவு 300 ரூபா, 400 ரூபா, 500 ரூபா (பல் வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து) ;

(19) மேலதிக கொடுப்பனவு 1,500 ரூபா (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்) ;

(20) 1/20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு அடிப்படைச் சம்பளம் X 1/20 X 3 நாட்கள் மட்டும் (பல் வைத்தியருக்கு மாத்திரம்) ;

(21) மேலதிகக் கொடுப்பனவு 120 மணித்தியாலம்- ஒரு மாதத்திற்கு (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்) ;

(22) வரவு செலவுத் திட்டத்தின்படி 1,000 ரூபா மாதாந்தம் ;

(23) தொலைபேசிக் கொடுப்பனவு மாதாந்தம் :

| | |
|---|---|
| விங் கமாண்டர் | 2,000 ரூபா |
| குறூப் கப்ரன் | 4,000 ரூபா |
| விசேட வைத்தியர் | 7,000 ரூபா |
| வைத்தியர் | 4,000 ரூபா |

(24) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 15,000 ரூபா. (பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்) ;

(25) கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 7,500 ரூபா (கால்நடை பல் வைத்திய அதிகாரிகளுக்கு மாத்திரம்).

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2015, ஓகத்து 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் ''பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழில்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட'' என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம் ........................ பிரிவு'' எனக் குறிப்பிப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பக்காரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்ப தாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல் எதுவும் பிழையான தெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப் பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற்கூறப் பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற் கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப் படும் ;

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா ;

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டா.

ஜீ. பி. புலத்சிங்கல,
எயார் மாஷல்,
வான்படை தளபதி.

இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ................. பிரிவில் அரசாணைபெற்ற அலுவலர் பதவி

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவுமுறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) : ----.

2. முழுப் பெயர் :----.

(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியில் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் : ----.

8. அஞ்சல் முகவரி :----.

9. இணையதள முகவரி :----.

10. பிறந்த திகதி :----.

11. உயரம் :----.

12. மாவட்டம் :----.

13. தேர்தற் தொகுதி :----.

14. கிராம அலுவலர் பிரிவு :----.

15. தொலைபேசி இலக்கம் :----.

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

17. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வகலாசாலை | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா./த.)<br>க.பொ.த. (உ./த.)<br><br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

18. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

19. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

21. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

22. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

23. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

24. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

25. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக : ----.

26. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

27. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

28. **விண்ணப்பகாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை.-** மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்து கிறேன். இலங்கைச் சனநாயகக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்ப தாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

8-596

---

## இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான நேரடி மற்றும் தொண்டர் வான்படையின் வீராங்கனைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் கீழ்க்காணும் துறைகளில் வான்படை வீரர்/மற்றும் தொண்டர் வான்படையின் வீராங்கனை களுக்கும் தொழில் துறை தேவைப்பாட்டுக்கமைய சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் :-

1. (அ) **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமையும் தொழில்துறை தகைமையும் :**

(1) ***பொது இயந்திரவியல் துறை (நிரந்தர-ஆண்) :***

(அ) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி மேலதிக தகைமையாகும்.

(2) மோட்டார் போக்குவரத்து இயந்திர விண்ணப்ப தாரர்கள் தொழில்துறை அமைச்சு மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத பொறியியல் கலையில் (மோட்டார் போக்கு வரத்து இயந்திரவியலாளர்) அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி மூலமாக இரண்டு வருடத்திற்குக் குறையாத பொறியியல் கலையில் (மோட்டார் போக்கு வரத்து இயந்திரவியலாளர்) சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் முன்னணி விமான வீரர் நிலையில் சேர்த்துக்கொள்ளப்படு வார்கள்.

(2) **இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு இயந்திர வியலாளர் (நிரந்தர-ஆண்) :**

(அ) வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர்

(ஆ) தொலைபேசி இயந்திரவியலாளர்

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

மற்றும்

(2) தொழில்துறை அமைச்சு மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத பொறியியல் கலையில் (தொலைத்தொடர்பு, இலத்திரனியல், மின்சார) அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி மூலமாக இரண்டு வருடத்திற்குக் குறையாத பொறியியல் கலையில் (தொலைத்தொடர்பு, இலத்திரனியல், மின்சார) சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முன்னணி விமான வீரர் நிலையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(3) **பரிபாலன துறை :**

(அ) தணிக்கை உதவியாளர் (நிரந்தர - ஆண்/பெண்)

(1) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சித்தி பெற்றிருத்தல் ;

(2) இலங்கைக் கணக்கியல் துறையில் இரண்டாம் மட்டம் (AAT Stage II) முடித்திருத்தல் வேண்டும் ; அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் துறையில் டிப்ளோமா (HNDA) இரண்டாம் வருட பூர்த்தி அல்லது உயர் தேசிய வர்த்தகத் துறையில் டிப்ளோமா (HNDC) இரண்டாம் வருட பூர்த்தி இருத்தல் வேண்டும் ;

(3) பொதுத்துறை அல்லது தனியார்துறை கணக்கியலில் அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முன்னணி விமான வீரர் நிலையில் சேர்த்துக்கொள் ளப்படுவார்கள்.

(4) **தொழிற்பாடுகள் துறை** (தொண்டர் - பெண்) :

(அ) பூமி தொழிற்பாட்டாளர் (சிகையலங்கார நிபுணர்/ஒப்பனை யாளர்) :

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் ;

(2) சிகையலங்கார நிபுணர்/ஒப்பனையாளர் தொடர்பாகப் பெற்ற 6 மாத கால டிப்ளோமா இருத்தல் வேண்டும். ஒப்பனையாளர் தொடர்பான தேசிய தொழில் தகைமையில் (NVQ Level iv) இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும் ;

(3) ஆண் மற்றும் பெண்களுக்கு முடி வெட்டுதல், முடி சிகிச்சை, முடி அழகாக்குதல், நகம் மற்றும் பாதத் தினை அழகாக்குதல் மற்றும் 1 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(5) **உடற்பயிற்சியாளர் (பிசியோதெரபி உதவியாளர்) - (தொண்டர்-பெண்) :**

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் ;

(2) பிசியோதெரபி உதவியாளர் மற்றும் மசாஜ் பயிற்சி நெறியை கொழும்பு விளையாட்டு மருத்துவப் பிரிவில் பூர்த்திசெய்து இருத்தல் வேண்டும். ஜிம்னாசியம் மற்றும் விளையாட்டுத் துறையில் அனுபவம் இருத்தல் வேண்டும். சான்றிதழ் முன்வைப்பு அவசியமாகும்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தகுதியான நிலையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

2. **ஏனைய தகைமைகள்**.- இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) **தேசிய இனம்**.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) **குடியியல் நிலை**.- நிரந்தர விவாகமாகாதவர் (ஆண்/பெண்) ; தொண்டர்-(பெண்) விவாகமானவர்/விவாகமாகாதவர்.

(இ) **வயது**.- (2015, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று) நிரந்தர- 18-28 வயது வரை (ஆண்) (தணிக்கை உதவியாளர் 18-26) ; 18-26 வயது வரை (பெண்) ; 18-30 வயது வரை (பெண்)

(ஈ) **உயரம்**.- நிரந்தர (ஆண்) 5 அடி 5 அங்குலம் ; நிரந்தர/ தொண்டர் (பெண்) 5 அடி 3 அங்குலம்

(உ) **உடல் நிறை**.- 19 < உடற்பருமன் சுட்டி < 26 (ஆண்)

17 < உடற்பருமன் சுட்டி < 25 (பெண்)

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2 \text{(M)}}$$

(ஊ) மார்பு.- ஆண் 32" (குறைந்தது)

(எ) **பார்வை வர்ணப்பதிவு மட்டம்**.- (CP2)

(ஏ) **தொலைபார்வை**.- இரண்டு கண்களிலும் 6/6 - நிரந்தர (ஆண்/பெண்) - மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்

(ஐ) ***குடியியல் நிலை***.- *நிரந்தர வான் வீரர்/வீராங்கனை திருமணம் முடிக்காமல் ; தொண்டர் வான்படை வீரர்/ வீராங்கனை திருமணம் முடித்து/முடிக்காமல்).*

*நிரந்தர விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான் படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவ துடன் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.)*

*தொண்டர் அடிப்படை பயிற்சியைப் பூர்த்திசெய்த பின்பு விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.*

*3*. *பந்தி 1, 2 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் தகைமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.*

*4*. *விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற்கொள்ளப்படும்.*

5. **சேவை நிபந்தனைகள்**.- *(அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.*

*(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர/தொண்டர் வான்படை வீரர்/வீராங்கனைகள் அடிப்படைப் பயிற்சியின் பின், அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.*

*6*. ***தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்*** :

*(அ) நிரந்தர (ஆண்/பெண்).- தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரர்கள் நிரந்தர வான்படையில் இரண்டாம் முன்னணி விமான வீரர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுகப்படுவார்கள். மேலும், 4 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவை யாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுக மளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்த மான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.*

*(ஆ) தொண்டர் (பெண்).- தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரர்கள் தொண்டர் வான்படையில் தகுதியான தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர் களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.*

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- *தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.*

*8*. ***சம்பளமும் கொடுப்பனவுகளும்*** :

*(அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-*

| | | |
|---|---|---|
| *விமான வீரர்* | : | *ரூபா 1,73,000-6 x 1,740-19 x 2,400 = ரூபா 2,22,300* |
| *முன்னணி விமான வீரர்* | : | *ரூபா 1,78,320-4 x 1,740-19 x 2,040 = ரூபா 2,22,300* |
| *கோப்ரல்* | : | *ரூபா 1,83,540-10 x 2,040 - 9 x - 2,880 = ரூபா 2,29,860* |
| *சார்ஜன்ட்* | : | *ரூபா 1,87,620-3 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180* |
| *பிளைட் சார்ஜன்ட்* | : | *ரூபா 1,91,700-1 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180* |
| *அதிகாரம்பெற்ற அலுவலர்* | : | *ரூபா 1,99,500-7 x 2,880 - 14 x 3,840 = ரூபா 2,73,420* |
| *பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர்* | : | *ரூபா 2,23,500- 13 x 3,840 = ரூபா 2,73,420* |

*மேற்குறிப்பிட்ட சம்பளத் திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகள் சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.*

*(ஆ)* ***வேறு கொடுப்பனவுகள் :***

*(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 7,800 ரூபா ;*

*(2) கடினப்படி மாதமொன்றுக்கு 600 ரூபா ;*

*(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு 3,900 ரூபா வழங்கப்படும் ;*

*(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு 2,400 ரூபா வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;*

*(5) விசேட கொடுப்பனவு.- அடிப்படை சம்பளத்தில் 15% மற்றும் 750 ரூபா ;*

(6) ***உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.-*** சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இலிருந்து 850 வரை) ;

(7) ***உணவுக் கொடுப்பனவு.-*** வெளியில் தங்கும் வான்படை வீரர்/வான்படை வீராங்கனை மாதமொன்றுக்கு 13,500 ரூபா (உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவச உணவு வசதி) ;

(8) ***சீருடைக் கொடுப்பனவு.-*** மாதமொன்றுக்கு 170 ரூபா வழங்கப்படும் ;

(9) ***மேலதிகக் கொடுப்பனவு.-*** மாதமொன்றுக்கு 1,000 ரூபா வழங்கப்படும் ;

(10) ***தங்குமிட வசதி.-*** உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(11) ***பிரயாணம்.-*** ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர் / வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(12) ***கலவரகாலப்படி.-*** நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(13) ***தகைமைச் சம்பளம்.-*** விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை 637.50 ரூபா வழங்கப்படும் ;

(14) ***நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.-*** மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு 30 ரூபாவிலிருந்து 511.50 ரூபா வரை வழங்கப்படும் ;

(15) ***மீள அமர்த்தலுக்கான சம்பளம்.-*** மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(16) ***மருத்துவம்.-*** வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(17) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (48 கி. மீ.) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(18) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு 1,200 ரூபாவிலிருந்து 3,300 ரூபா வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(19) ***விரிவுரையாளர் கொடுப்பனவு.-*** மாதமொன்றுக்கு 425 ரூபாவிலிருந்து 510 ரூபா வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(20) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(21) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

(22) வரவு செலவுத் திட்டத்தின்படி 1,000 ரூபா மாதாந்தம்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.-** (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2015, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழில்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் துறை .......................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா. ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்ப முடியும்.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு பதிவுத்தபால் மூலம் அழைக்கப்படுவர்.

(ஈ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில்தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

10. நேர்முகப் பரீட்சை, கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகத்திற்கு விண்ணப்பதாரர்கள் தங்களின் செலவில் முகம் கொடுக்க வேண்டும்.

11. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆள் அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய ஆள் அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

12. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர் களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

13. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

14. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானதாக இருப்பின் அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

15. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஜீ. பி. புலத்சிங்கல,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்களுக்கான ............................................ பதவி

1. முழுப் பெயர் :----.

(தேசிய ஆளடையாள அட்டைப்படி)

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியின் விமான முகாம் நிலையம் :----.

7. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :----.

8. மாவட்டம் :----.

9. தேர்தற் தொகுதி :----.

10. கிராம அலுவலர் பிரிவு :----.

11. தொலைபேசி இலக்கம் :----.

12. பிறந்த திகதி :----.

13. வயது.- 2015, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று :

வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

14. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

15. பால் :----.

16. உயரம் : அடி ---- அங்குலம் ----.

17. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

18. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

19. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

20. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.

21. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

22. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

23. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

24. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

25. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப் படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8-597

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொதுச்சேவை ஆணைக்குழு

### இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை – 2013 (2014)

இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசின் 1880 / 26 ஆம் இலக்க 2014.09.19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1235 / 21 ஆம் இலக்க 2002.05.08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விவசாய சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இலங்கை விவசாயச் சேவையின் III ஆந் தர (இங்கு கீழ் காணும் 3 ஆந் பந்தியில் குறிப்பிட்டுள்ள) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்காக பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள "செயலாளர்" எனும் பதம் விவசாய அமைச்சுச் செயலாளரை குறிக்கும். "சேவை" எனும் பதம் இலங்கை விவசாயச் சேவையை குறிக்கும்.

2. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

2.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் முதலாம், இரண்டாம் பின்னிணைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பரப்பிற்கு ஏற்ப வெவ்வேறு வினாத்தாள்கள் கொண்ட மட்டுப்படுத்திய, திறந்த இரண்டு பரீட்சை நடாத்தப்படும்.

2.2 இலங்கை விவசாய சேவையின் III ஆந் தரத்தில் நிலவும் 310 வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் இப்போட்டிப் பரீட்சை நடாத்தப்படுகின்றது.

2.3 நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப சேர்த்துக்கொள்ளப்படும் சதவீத அளவு.

| துறை | திறந்த | மட்டுப்படுத்திய |
|---|---|---|
| விவசாய அபிவிருத்தி | 69 | 85 |
| விவசாய ஆராய்ச்சி | 88 | 59 |
| விவசாயப் பொருளியல் | 5 | 4 |

3. 3.1 வெற்றிடமாகவுள்ள பதவிகளும் வெற்றிட எண்ணிக்கையும் பதவி இலக்கங்களும் :

| பதவி | நிலவும் வெற்றிட எண்ணிக்கை | பதவி இலக்கம் |
|---|---|---|
| உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய அபிவிருத்தி) | 154 | 1 |
| உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) | 147 | 2 |
| உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) | 09 | 3 |

**குறிப்பு** :

- திறந்த போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரியொருவர் விவசாய அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி, விவசாயப் பெருளியல் ஆகிய துறைகளில் ஒன்றிற்கு அல்லது மேற்பட்டவற்றிற்கு விண்ணப்பிக்க முடியும். அவற்றினை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பப்படிவத்திலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

- மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரி ஒரு பதவிக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அதனை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்த விண்ணப்பப்படிவத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- மட்டுப்படுத்திய, திறந்த ஆகிய இரண்டு போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்த இரண்டு விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

**4. சேவையில் அமர்த்தும் நியதிகளும், நிபந்தனைகளும் :**

4.1 இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையனவுமாகும். இப்பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் விதவை /தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களித்தல் வேண்டும்.

4.2 இலங்கை விவசாயச் சேவை அலுவலர்கள் அவசியப்படுமிடத்து சகல மாகாண அரச சேவைகளிலும் சேவையாற்ற கடப்பாடு உடையவர்களாவர். இதற்காக மாகாண அரச சேவையின் பதவி ஒன்றின் சேவைக்காக தற்காலிகமாக விடுவிக்கப்படுவர். அவ்வாறு விடுவிக்கப்படும் காலம் பணியின் அவசியத்தன்மை, பணியாளரை ஈடுபடுத்தும் தேவை மற்றும் ஏனைய காரணங்களின் படியும் உரிய மாகாண அதிகாரிக்கும், நியமன அதிகாரிக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் :

(அ) சேவையிலிருந்து விடுவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைய நியமனக் கடிதமொன்று மாகாண அதிகாரியால் தொடர்புடைய அலுவலருக்கு வழங்கப்படும். உரிய மாகாண அதிகாரியால் மாகாணத்திற்குள் இடமாற்றம் செய்யப்படும் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இது அமையும்.

(ஆ) மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்டாலும், அக்காலத்தினுள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நிர்வாகத்திற்கும் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவராவார்.

(இ) மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்ட காலம் முடிவடையும் போதும் தமது நிரந்தர சேவைக்கு திரும்புதல் வேண்டும்.

4.3 III ஆந் தரத்திற்கு நியமிக்கும்போது திறந்த போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் 3 வருட தகுதிகாண் காலத்திற்கும் மட்டுப்படுத்திய பரீட்சை மூலம் நியமிக்கப்படும் அலுவலர்கள் ஒரு வருட பதில் கடமையாற்றல் காலமொன்றிற்கும் உட்படுத்தப்படுவர். திறந்த ஆட்சேர்ப்பின் மூலம் நியமிக்கப்படும் அலுவலர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்பட முன்னர் முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்பின் மூலம் நியமிக்கப்படும் அலுவலர்கள் 3 வருட காலத்தினுள் முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.

4.4 ***திறன் விருத்தி.-*** சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய சமூக, பொருளாதார, கலாசார மற்றும் பணியாற்றும் சூழலில் காணப்படும் போக்குகள் பற்றிய அறிவையும் பெற்றுக்கொள்வதற்கு விவசாயத்திணைக்களத்தால் அல்லது திணைக்களம் இனம்காணும் வேறு நிறுவனமொன்றினால் (உ+ம்: இலங்கை அபிவிருத்தி நிர்வாகநிறுவனம்) ஒரு மாத (1) பயிற்சி நெறி ஒன்று வழங்கப்படும். பயிற்சி நெறியின் இறுதியில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின்படி சான்றிதழொன்று வழங்கப்படும். சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு இச்சான்றிதழ் முக்கியமானதாகும்.

4.5 தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் தீவின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராயிருத்தல் வேண்டும்.

4.6 இந்நியமனங்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக்குடியரசின் 1880/ 26 ஆம் இலக்க 2014.09.19 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1235/21 ஆம் இலக்க 2002.05.08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விவசாயச் சேவை பிரமாணத்திற்கும் அதில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைவானதாக இருக்கும்.

4.7 சகல நியமனங்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பணியாற்றல் நடைமுறைச்சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கும் தாபனக் கோவையின் பொது நிபந்தனை விதிகளுக்கும் ஏற்புடையதாகும்.

4.8 இவ்வர்த்தமானியின் பகுதி I (IIஅ) வின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகள் மீது உங்கள் கவனம் வேண்டப்படுகின்றது.

4.9 சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் தமது பதவிகளில் நிரந்தரமாக்கப்படும்போது ஏனைய விடயங்களுக்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலம் சேவையில் இணைந்த அலுவலர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் அரசகரும மொழியொன்றில் அதாவது சிங்களம் அல்லது தமிழ் மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். அரச கரும மொழித் தேர்ச்சித் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிப்பதற்கு க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்திபெற்றிருப்பதனை உறுதி செய்வதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்றுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது பெறுபேற்றுச் சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

4.10 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் திட்டத்தின் பிரகாரம் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசகரும மொழிகளாகும். எனவே அரச ஊழியர்கள் இவ்விரு மொழி மூலத்திலும் கடமையாற்றக்கூடியவாறு அ.நி.சு 01/2014 இன் பிரகாரம் மற்றும் அதனோடு தொடர்புடைய சுற்றுநிருபங்களில் கூறப்பட்ட விதிகளின் படி உரிய காலத்தினுள் உரிய இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சி மட்டங்களை பெறுதல் வேண்டும்.

5. **கட்டமைப்பும்,வருடாந்த சம்பள அளவுத்திட்டமும்.-**

இப்பதவிகளுக்கு பொது நிர்வாக சுற்று நிருபம் 06/2006க்கு அமைவான திரட்டிய மாதசம்பள அளவுத்திட்டம் கீழ் குறிப்பிட்டவாறாகும்.

SL-1- 2006 - ரூ 22,935-645 × 10-790 × 8-1,050 × 17- 53,555 ரூபா.

இலங்கை விவசாய சேவையின் III ஆந் வகுப்பிற்கே ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

III ஆந் தரத்தின் ஆரம்ப சம்பள படிநிலை 22,935 ரூபா ஆகும்.

6. **திறந்த போட்டிப் பரீட்சை.-** விண்ணப்பதாரி ஒருவருக்கு விவசாய அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி, விவசாயப் பொருளியல் ஆகிய துறைகளில் ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்கு விண்ணப்பிக்க முடியும்.

6.1 ***தகைமைகள் :***

6.1.1 *கல்வித் தகைமைகள் :*

6.1.1.1 விவசாய அபிவிருத்தி துறைக்கும்,விவசாய பொருளியல் துறைக்குமானது-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெறப்பட்ட விவசாய விஞ்ஞானத்திலான (4) நான்கு வருட பட்டம் ;

அல்லது

பல்கழைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றி லிருந்து பெறப்பட்ட விஞ்ஞானமானி விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் நான்கு வருட பட்டம்.

6.1.1.2 விவசாய ஆராய்ச்சி துறைக்கானது-

பல்கழைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெறப்பட்ட விவசாய விஞ்ஞானத்திலான (4) நான்கு வருட பட்டம் ;

அல்லது

பல்கழைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றி லிருந்து பெறப்பட்ட தாவரவியல், இரசாயனவியல் அல்லது விலங்கியல் தொடர்பான (4) நான்கு வருட விஞ்ஞானமானி பட்டம்.

அல்லது

பல்கழைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றி லிருந்து பெறப்பட்ட விஞ்ஞானமானி விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் (4) நான்கு வருட பட்டம்.

6.1.2 ***உடற்தகைமை.-*** விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் சேவையாற்றக்கூடியவாறு சிறந்த உடல் ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

6.1.3 ***பொதுத்தகைமைகள் :***

(அ) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இதன்படி விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1993.09.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராகவும் 1985.09.21 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னரான திகதியாகவும் இருப்பின் மட்டுமே வயது தொடர்புடைய தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளதாக கருதப்படும்.

(இ) ஒரு விண்ணப்பதாரி மூன்று (3) திறந்த பரீட்சைகளுக்கு மட்டுமே தோற்ற முடியும்.

(ஈ) சகல விண்ணப்பதாரர்களும் தீவின் எப்பகுதியிலும் சேவையாற்றக்கூடியவாறு பொருத்தமான உடற் தகைமையுடையவறாக இருத்தல் வேண்டும். அதனை வைத்திய பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி நல்லொழுக்கமுடையோராக இருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்தில் சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.(திறந்த ஆட்சேர்ப்பிப்பிற்காக விண்ணப்பிப்பவர்கள் பரீட்சைக்காக விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினத்தில் அல்லது அதற்கு முன்னர் அடிப்படைக் கல்வித் தகைமைகளாக குறிப்பிடப்பட்டுள்ள பட்டம் தொடர்பாக பூரணத்தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும். பட்டசான்றிதழின் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியொன்றாக இருத்தல் வேண்டும். (பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

6.2 ***எழுத்துப் பரீட்சை :***

| *பாடங்கள்* | *உயர்ந்தபட்ச புள்ளிகள்* | *சித்திபெறுவதற்கான குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சைக்கான வினாத்தாள் | 100 | 40 |
| விடயதானம் தொடர்புடைய வினாத்தாள் (உரிய பதவியின் படி). பாடப்பரப்பு முதலாம் பின்னிணைப்பில் காட்டப்படுள்ளது | 100 | 40 |

**குறிப்பு** :

(i) முதலாம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயதான அறிவையும் நுண்ணறிவையும் மதிப்பிடும் வினாத்தாள்களிற்கு பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கேற்ப உயர் வரிசைக்கிரமப்படி ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளித்தொகையைப் பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து வெற்றிட எண்ணிக்கையில் இரு மடங்கிற்கு மேற்படாத எண்ணிக்கையினர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சைக்குழுவால் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து விடயதான அறிவையும்,நுண்ணறிவு திறனையும் அளவிடும் வினாத்தாள்களிற்கு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் உயர் வரிசைக்கிரமப்படி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) திறந்த ஆட்சேர்ப்பின்போது அட்டவணைப்படுத்தப்பட்ட பதவியொன்றுக்கு அல்லது மேற்பட்டவற்றிற்கு விண்ணப்பித்து அதில் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்படுவதற்குப் போதுமான புள்ளித் தொகையொன்றை பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர்களின் விருப்பத்தையும் வெற்றிட எண்ணிக்கையையும் கருத்தில் கொண்டு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரர்களின் விருப்பத்தினை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். விருப்பத் தெரிவினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iii) நேர்முகப் பரீட்சையின்போது புள்ளி வழங்கப்படமாட்டாது.

(iv) ***பெறுபேறுகளை வெளியிடல்.***- வெற்றிட எண்ணிக்கையைப் போன்ற இரு மடங்கிற்கு மேற்படாத எண்ணிக்கைகொண்ட தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணையொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் அவர்களின் பெறுபேறுகள் தனிப்பட அல்லது www.result.exam.gov.lkவலைத் தளத்தினூடாக கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு** :

7.1 ***ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் :***

7.1.1 ***அடிப்படை தகைமைகள் :***

7.1.1.1 விவசாய அபிவிருத்தித் துறைக்கு-

(அ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விஷேட வகுப்பில் விவசாயப் போதனாசிரியர் பதவியை வகிக்கும் ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின்வகுப்பு I இல் ஆகக் குறைந்தது 4 வருடங்கள் செயலூக்கமுள்ள, திருப்திகரமானசேவை காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாயப்போதனாசிரியர் பதவியை வகிக்கும் ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(இ) மேற்குறித்த 6.1.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இணை அலுவலர்கள் சேவை வகுதியின் கீழுள்ள ஒரு பதவியில் பணியாற்றுகின்ற விவசாயத்துறையில் அதாவது விவசாய ஆராய்ச்சி, விவசாய அபிவிருத்தி அல்லது விவசாயப் பொருளியல் போன்ற துறைகளில் 05 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஈ) 10 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமானசேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பூங்கா உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஓர் அலுவலராக இருத்தல் ;

அல்லது

(உ) 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமானசேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒரு விவசாய விஞ்ஞான அல்லது விஞ்ஞான பட்டத்தை பெற்ற விவசாயப் போதனாசிரியர் அல்லது பூங்கா உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

7.1.1.2 **விவசாயப் பொருளியல் துறைக்கு**-

(அ) 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொருளியல் உதவியாளர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஆ) மேற்குறித்த 6.1.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இணை அலுவலர்கள் சேவை வகுதியின் கீழுள்ள ஒரு பதவியில் பணியாற்றுகின்ற விவசாயத் துறையில் அதாவது விவசாய ஆராய்ச்சி, விவசாய அபிவிருத்தி அல்லது விவசாயப் பொருளியல் ஆகிய துறையொன்றில் 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒரு அலுவலராக இருத்தல்.

7.1.1.3 **விவசாய ஆராய்ச்சி துறைக்கு**-

(அ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விஷேட வகுப்பின் ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண்வள ஆய்வு மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின்வகுப்பு I இல் ஆகக் குறைந்தது 04 வருட செயலூக்கமுள்ள, திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண்வள ஆய்வு மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல் ;

அல்லது

(இ) மேற்குறித்த7.1.1.2 இல் குறிப்பிட்டப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இணை அலுவலர்கள் சேவை வகுதியின் கீழுள்ள ஒரு பதவியில் பணியாற்றுகின்ற விவசாயத் துறையில் அதாவது விவசாய ஆராய்ச்சி, விவசாய அபிவிருத்தி அல்லது விவசாயப் பொருளியல் ஆகிய துறையொன்றில் 05 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஓர் அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ஈ) 5 வருட செயலூக்கமுள்ள திருப்திகரமானசேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாய விஞ்ஞான அல்லது விஞ்ஞான பட்டத்தை பெற்றுள்ள ஆராய்ச்சி உதவியாளர் பதவியை, மண்வள ஆய்வு மற்றும் காணி மதிப்பீட்டு அலுவலர் பதவியை வகிக்கின்ற ஒரு அலுவலராக இருத்தல்.

**குறிப்பு** :

1. இணை அலுவலர்கள் சேவை வகுதியின் கீழுள்ள பதவிகளை வகிக்கின்ற அலுவலர்கள் விவசாய அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி அல்லது விவசாயப் பொருளியல் ஆகிய துறைகளில் ஒரு துறைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. உயர்நீதிமன்ற விண்ணப்ப இலக்கம் 61/2006 இன் தீர்ப்புக்கு அமைய இலங்கை விவசாயச் சேவைகள் பிரமாணக் குறிப்பு திருத்தப்பட்ட 1619/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்ட 2009.09.18 ஆந் திகதியன்று விவசாயக்

கண்காணிப்பு அலுவலர் அல்லது நிகழ்ச்சி உதவியாளர் (விவசாயம்) எனும் பதவியொன்றை வகித்து 5 வருட செயலூக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள விவசாயக் கண்காணிப்பு அலுவலர் அல்லது நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்) எனும் பதவியொன்றை வகிக்கும் அலுவலர்களும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுகின்றனர்.

இவ் அலுவலர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின்போது விவசாய அபிவிருத்தி அல்லது விவசாயப் பொருளியல், அல்லது விவசாய ஆராய்ச்சி எனும் துறைகளில் ஒரு துறைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

7.1.2 ***உடல் தகைமை.***- ஒவ்வொரு அபேட்சகரும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு எல்லா விதத்திலும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகைமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

7.1.3 ***ஏனையவை :***

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் தேவையான தகைமைகளைப்பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு பின்னர் விண்ணப்பதாரர் ஒருவருக்கு கடந்த காலத்திற்குட்பட்டு செயல் வலுப்பெறும் வகையில் வழங்கப்பட்ட சலுகை அல்லது பதவியுயர்வுகள், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான உரிய தகைமையொன்றாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது;

(iv) உடன் முன்னரான 5 வருட திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2 ***ஆட்சேர்ப்பு முறை :***

7.2.1 ***எழுத்து மூலப்பரீட்சை.***- மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையின்போது விடயஅறிவை அளவிடும் வினாத்தாள் வெளிக்கள பணிகள் சார்ந்த அனுபவத்திற்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கப்படும் (இரண்டாவது பின் இணைப்பைப் பார்க்கவும்)

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளி அளவு | சித்தியெய்தத் தேவையான புள்ளி அளவு (ஆகக் குறைந்தது) |
|---|---|---|
| நுண்ணறிவு பரீட்சை வினாத்தாள் | 100 | 40 |
| விடய அறிவு வினாத்தாள் (உரிய பதவிக் கேற்ப):- பாட விதானம் பற்றிய விபரங்கள் பின்னிணைப்பு இரண்டில் தரப்பட்டுள்ளன. | 100 | 40 |

7.2.2 ***கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.***- சேவை மூப்புக்கு புள்ளி வழங்கப்படுவதோடு அடிப்படை தகைமைகளும் பரிசீலிக்கப்படும்

(அ) விண்ணப்பதாரர்கள் நுண்ணறிவுப் பரீட்சை வினாத்தாள்களுக்கும் மேலே 7.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஆட்சேர்ப்புப் பதவி தொடர்பாகவும் இரண்டாம் பின்னிணைப்பில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உரிய விடயதான அறிவு வினாத்தாளுக்கும் தோற்றுதல் வேண்டும்;

(ஆ) உரிய இரண்டு வினாத்தாள்களிலும் 40% வீதத்திற்கு அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(இ) நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரர்களின் அடிப்படை தகைமைகளை உறுதிபடுத்துவதற்கான ஆவணங்களும், சான்றிதழ்களும் பரிசீலிக்கப்படும்.

(ஈ) நேர்முகப் பரீட்சையின்போது சேவை மூப்புக்கு பெற்றுக் கொண்ட புள்ளிகளை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுத்ததன் பின்னர் அப்புள்ளிகளையும் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளையும் கூட்டி, ஒவ்வொரு பதவிக்குமான மட்டுப்படுத்திய பரீட்சையின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு பொதுச் சேவைகள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்படும். அம்முன்னுரிமைப் பட்டியலில் உயர் வரிசைக் கிரமப்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

***நேர்முகப் பரீட்சையின்போது சேவை மூப்பிற்கு புள்ளி வழங்கப்படும் முறை.***- விண்ணப்பதாரிகள் உரிய தகைமைகளை பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து விண்ணப்பங் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி

வரை சேவையாற்றிய செயல் வலுக் கொண்ட காலம் மட்டும் சேவை மூப்பிற்கு புள்ளி வழங்க கவனத்திலெடுக்கப்படும். 30 உச்சப் புள்ளிகளுக்கு உட்பட்டதாக அச் செயல்வலு கொண்ட சேவைக் காலத்தில் உள்ளடக்கப்படும் 1 வருடத்திற்கு 2 புள்ளிகள் வீதமும் 180 நாட்கள் அல்லது அதற்குக் கூடிய சேவைக் காலத்திற்கு 01 புள்ளி வீதமும் வழங்கப்படும்.

**8. பரீட்சைக் கட்டணம் :**

8.1 ஒரு பதவிக்கு விண்ணப்பிப்பதாயின் பரீட்சைக்கட்டணம் 800 ரூபா ஆகும்.

8.2 ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 1000/= ஆகும்.

இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வரவு தலைப்பு 2003-02-13 இன் கீழ் அரச வருமானத்திற்கு வரவு வைத்து நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலாயினும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்கு பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழன்று விடாதபடி ஒரு விளிம்பை மாத்திரம் ஒட்டுதல் வேண்டும். பரீட்சை கட்டணமாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சை கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படமாட்டாது. வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றவும் முடியாது. இப்பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும்.

**9. விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தல், பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

9.1 திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் அல்லது மட்டுப்படுத்திய பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒரு விண்ணப்பப்படிவத்தினை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தி திறந்த, மட்டுப்படுத்திய பரீட்சை விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டும். கடதாசியின் இருபக்கங்களையும் உபயோகித்து 8 ½" x 12" (ஏ4) அளவுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை விண்ணப்பதாரி தனது சொந்த கையெழுத்தில் தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1-6 வரையான பகுதிகள் முதல் பக்கத்திலும் மிகுதி 2 ஆம் 3 ஆம் பக்கங்களிலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும் என்பதை முக்கியமாக கவனத்தில் கொள்க.

9.2 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாததும் முழுமையாக பூரணப்படுத்தப்படாததும் திருத்தல் திரவம் (டிபெக்ஸ்) பயன்படுத்தி திருத்தப்பட்டதுமான விண்ணப்பப்படிவங்களும் குறிப்பு இலக்கமும் ஏனைய தகவல்களும் மீள எழுதப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலிடப்படும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் கட்டாயமாகும். தேவையேற்படின் நேர்முகப் பரீட்சையின்போது அதன் நிழற் பிரதியை சமர்ப்பிக்கத் தயாராகயிருத்தல் வேண்டும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் மாதிரி விண்ணப்பம் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையிட்டு விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும்.

9.3 விண்ணப்பங்களை பூரணப்படுத்தும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவமாயின் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவமாயின் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை 2015.09.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த.பெ.எண் 1503 கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விவசாயச் சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த / மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை – 2013 (2014)" எனும் வாசகம் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

9.4 விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மட்டுப்படுத்திய பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் ஊடாகவும் மாகாண சபையாயின் மாகாண விவசாய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் ஊடாகவும் அனுப்புதல் வேண்டும்.

**கவனிக்க :**

இவ் அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாததும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் ஒழுக்கமற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை திணைக்களத்தின் அல்லது அமைச்சினைச் சேர்ந்த அலுவலர்களின் பெயருக்கு அனுப்புதல் கூடாது. விண்ணப்பமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**10. பரீட்சைக்கு தோற்றல் :**

10.1 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட (திறந்த விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்

சீட்டுடன் விண்ணப்பங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிரவேச பத்திரங்கள் அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகளை அனுப்பிய பின் பரீட்சைத் திணைக்களத்தால் அதுபற்றி உடனடியாக செய்திப்பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும். பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களின் பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகளையும் பதிவுத்தபாலிடும்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்து பரீட்சையின் பெயர் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், சுயமுகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். கொழும்பு அல்லாத வெளிப்பிரதேசமாயின் பிரவேசப்பத்திரத்தினை அனுப்புவதற்காக உரிய இலக்கமொன்றையும் குறிப்பிட்டு உமது விபரங்களடங்கிய வேண்டுகோள் கடிதத்தோடு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் (பக்ஸ்) மூலம் அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

10.2 பரீட்சார்த்திகள் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் தமக்குரித்தான பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை நிலையத்திற்கான அனுமதி அட்டைகளை நிலையத்திற்கு சமூகமளிக்கும் முதல் தினத்தன்று நிலைய பொறுப்பதிகாரிக்கு கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்காதவர்கள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். தாம் தோற்றவிருக்கும் பரீட்சையின் உரிய வினாத்தாள்களுக்கு விடையளித்தல் பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். சகல பரீட்சார்த்திகளும் பின்பற்ற வேண்டிய சட்ட ஒழுங்குவிதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளை பேணிநடக்க கடப்பாடுடையவர்களாவர். இச்சட்ட ஒழுங்கு விதிகளை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடலாம்.

10.3 பரீட்சார்த்தியொருவருக்கு பிரவேசப்பத்திரமொன்று வழங்கப்படுதல் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியொன்றைப் பெற்றுள்ளதாக கருதப்படலாகாது.

11. **பரீட்சை நடைபெறும் திகதியும் இடமும்**.- இப்பரீட்சை 2015, திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

12. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. **பரீட்சை முறைமை** :

13.1 ***பரீட்சை மொழி*** .- இப்பரீட்சை சிங்களம்,தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13.2 விண்ணப்பதாரர்கள் பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும்.

14. **போட்டிப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளும் பாடப்பரப்பும்**.- எல்லா விண்ணப்பதாரர்களும் இங்கு பின்னால் குறிப்பிடப்படும் பாடப்பரப்பிற்கு ஏற்புடையவாறு 1 ஆம் 2 ஆம் வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பதவிக்கும் ஏற்புடைய பாடப் பரப்பு முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளது.

15. **நேர்முகப்பரீட்சை** :

15.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நேர்முகப்பரீட்சைக் குழு நியமனம் செய்யப்படும்.

15.2 விண்ணப்பதாரியொருவர் திறந்த ஆட்சேர்ப்பின்போது அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி ஒன்றிற்கு அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றிற்கு விண்ணப்பித்து ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் போதுமான புள்ளித்தொகையொன்றைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் பரீட்சார்திகளின் விருப்பத்தையும் வெற்றிட எண்ணிக்கையையும் கருத்திலெடுத்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். நேர்முகப்பரீட்சையின்போது அபேட்சகரின் விருப்பம் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

15.3 மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் சேவை மூப்புக்கான புள்ளிகள் வழங்கப்படும்.

16. விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களை இணைத்து அனுப்புதல் கூடாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தயாராயிருத்தல் வேண்டும்.

17. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனக் கண்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப்பின்னர் ஆகிய எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தன்மையிலிருந்து நீக்கப்படலாம். பரீட்சார்த்தியொருவர் வழங்கியுள்ள தகவலொன்று பொய்யானதென அல்லது ஏதும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளமை நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

18. போட்டிப் பரீட்சை தொடர்பான விண்ணப்பப்படிவங்களிலும், சேர்த்துக் கொள்ளப்படும் நடைமுறையிலும் தெளிவற்ற நிலை தோன்றுமாயின் அது பற்றிய இறுதி முடிவு நியமன அதிகாரியைச் சார்ந்ததாகும்.

19. காணப்படும் வெற்றிடங்கள் சகலதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ நிரப்புவது தொடர்பாக நியமன அதிகாரியே இறுதி முடிவெடுப்பார்.

20. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழி பிரதிகளுக்கிடையே தெளிவற்ற தன்மை காணப்படுமாயின் சிங்கள மொழிப்பிரதியே செல்லுபடியானதாக கருதப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர் ,
விவசாய அமைச்சு.

ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல,
2015, ஓகத்து 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

இலங்கை விவசாய சேவை III ஆந் தர பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்திய போட்டிப்பரீட்சை 2013 (2014)

Open/ Limited Competitive Examination to Recruitment to the Grade III of the Sri Lanka Agricultural Service – 2013 (2014)

(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கும் பரீட்சைக்குரிய பதவி/பதவிகள்
(வர்த்தமானி அறிவித்தலின் 03, 06, 07 ஆந் பந்திகளை பார்க்க)

| மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பதவியும் அதன் இலக்கமும் | | திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பதவிகளும் அதன் இலக்கங்களும் | |
|---|---|---|---|
| பதவி | பதவி இலக்கம் | பதவி | பதவி இலக்கம் |
| 1. | | 1 | |
| | | 2 | |
| | | 3 | |

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (வர்த்தமானியின் 13) பந்தியை பார்க்க.

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக)

உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிக்கு விண்ணப்பிப்பதாயின் விடையளிக்க தெரிவு செய்யும் பகுதி (முதலாம் பிண்ணினைப்பின்படி (அ) ஆயின் (கூட்டினுள் இல 1 ஐயும் அல்லது (ஆ) ஆயின் கூட்டினுள் இல 2 ஐயும் எழுதுக. இதனை பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

1. (i) முழுப் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
உ-ம்:- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA

(ii) இறுதியில் வரும் பெயர் ஆரம்பத்திலும் முதலெழுத்துக்கள் இறுதியிலும் வருமாறு :----.
உ-ம்:- GUNAWARDENA H.M.S.K

(iii) முழுப் பெயர் : சிங்களத்தில் / தமிழில் :----.

2. (i) நிரந்தர வதிவிட முகவரி :- (பிரவேசப்பத்திரங்கள் இம் முகவரிக்கு அனுப்பப்படும்)

(அ) சிங்களத்தில் / தமிழில் :----.

(ஆ) ஆங்கில பெரிய எழுத்தில் :----.

(ii) அலுவலக முகவரி.- (அரச சேவையிலுள்ள அலுவலர் எனின், அவரின் அலுவலக முகவரியை குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.) :----.

(அ) சிங்களத்தில் / தமிழில் :----.
(ஆ) ஆங்கில பெரிய எழுத்தில் :----.

3. பால் : ☐
ஆண் - 0
பெண் - 1 (உரிய கூட்டில் பொருத்தமான இலக்கத்தை இடுக.)

4. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐

5. (i) பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதியன்று வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. தொலைபேசி இல : ☐☐☐☐☐☐☐☐☐☐

7. இலங்கை பிரசையா என்பதை குறிப்பிடுக ? : ☐

ஆம்/இல்லை (உரிய கூட்டில் பொருத்தமான சொல்லை எழுதுக)

8. கல்வித் தகைமைகள் :

8.1. பெற்றுள்ள பட்டங்கள் தொடர்பான தகைமைகள் :-

| பெற்றுள்ள பட்டம்/பட்டங்கள் | கற்கை வருடமும் அப்பட்டம் செல்லுபடியாகும் தினமும் தெளிவாக குறிப்பிடுக | பல்கலைக்கழகம்/ கழகங்கள் | பாடங்கள் | சித்தி | மொழி மூலம் |
|---|---|---|---|---|---|
| 1. நான்கு வருட விவசாய விஞ்ஞானம்.<br>2. நான்கு வருட விஞ்ஞானமானி. (தாவரவியல், இரசாயனவியல் அல்லது உயிரியல் தொடர்பான)<br>3. நான்கு வருட விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவம். | | | | | |
| 1. | | | | | |

9. இதற்கு முன்னர் இலங்கை விவசாய சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றியுள்ளீரா?

ஆம் எனின் தோற்றிய ஆண்டு/ஆண்டுகளை குறிப்பிடுக. ......................................

10. மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை விண்ணப்பதாரர்கள், அறிவித்தலில் 7 ஆந் பந்தியின் பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக பெற்றுள்ள தகைமைகளை இங்கு குறிப்பிடுக.

| தற்போதைய பதவி | மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்பின் கீழ் சேர்த்துக் கொள்ள தகுதி பெறும் பதவிகள் : | |
|---|---|---|
| 1. ஆராய்ச்சி உதவியாளர்<br>2. மண் அளவை உத்தியோகத்தர்<br>3. காணி மதிப்பீட்டு உத்தியோகத்தர்<br>4. விவசாயப் போதனாசிரியர்கள்<br>5. பொருளியல் உதவியாளர்<br>6. தோட்ட உதவியாளர்<br>7. இணை அலுவலர்கள் சேவை வகுதி (பதவியை குறிப்பிடுக) | 1. உ.வி.ப (விவசாய ஆராய்ச்சி)<br>2. உ.வி.ப (விவசாய அபிவிருத்தி)<br>3. உ.வி.ப (விவசாயப் பொருளியல்) | உ.வி.ப (விவசாய அபிவிருத்தி)<br>உ.வி.ப (விவசாய ஆராய்ச்சி)<br>உ.வி.ப (விவசாயப் பொருளியல்)<br>பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளை பூரணப்படுத்தும் தினம் (வர்த்தமானி அறிவித்தலில் 7.1 இல் தகைமைகள் பூரணப்படுத்தும் தினம்) |

11. நீதி மன்றமொன்றினால் நீர் ஏதும் தவறுக்கு குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? ஆம்/இல்லை, ஆம் எனின், அது தொடர்பான விபரங்களை குறிப்பிடுக? :----.

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்று சீட்டு தொடர்பான விபரங்கள் :

1. பரீட்சை கட்டணம் செலுத்திய தபால் நிலையம் :----.
2. பற்றுச் சீட்டு இலக்கமும் திகதியும் :----.
3. செலுத்திய தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழன்று விடாத படி மேல் விளிம்பினால் மாத்திரம் இங்கு ஒட்டுக. (பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனளிக்கும்.) |

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென இத்தால் உறுதி செய்கின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவையாக அல்லது பிழையானதாக சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், சேர்த்துக் கொண்டதன் பின்னர் தெரியவருமிடத்து எனது நியமனம் உடனடியாக செல்லுபடியற்றதாக்கப்படும் என்பதையும், விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதில் ஏதும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அதற்கான பொறுப்பு என்னைச் சாரும் என்பதையும் நான் நன்கறிவேன். பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு இணங்குகின்றேன். உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தியுள்ளேன். மேலும் நான் ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பித்துள்ளேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல் :**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............................................ ஆந் திகதி தமது கையொப்பத்தை இட்டார் எனவும் மேலும் அவர் உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தி அப்பற்றுச் சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதி செய்யும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதி செய்பவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

விண்ணப்பதாரர் அரச திணைக்களமொன்றில் கடமையாற்றுபவரெனில் கீழே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களுடன் தமது நிறுவன தலைவரூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**நிறுவனத்தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ............................. திணைக்களத்தில்/மாகாண சபையில்.......…............ பதவியில் ................ ஆந் திகதி. முதல் கடமையாற்றுகின்றார் எனவும் அவருடைய வேலைகள் நடத்தை என்பன திருப்திகரமானவை/திருப்திகரமற்றவை எனவும் உடனடுத்த 5 வருட காலத்தினுள் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார்/ பெறவில்லை எனவும் இப்பதவிக்கு உரிய 7.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதால் இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க சகல விதத்திலும் தகைமை பெற்றுள்ளார். ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படவில்லை /உட்பட்டுள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். அவர் தெரிவு செய்யப்பட்டால் சேவையினின்றும் அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
நிறுவனத்தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

***1 ஆம் பின்னிணைப்பு***

**திறந்த போட்டிப் பரீட்சைக்கான நிபந்தனைகளும், பாட விதான சிபாரிசுகளும்**

***1 ஆவது வினாத்தாள்.*** *- விவேகப் பரீட்சை வினாத்தாள்.- மொழி, கணிதம், தர்க்க ஆற்றல் என்பவற்றை அளவிடுவதற்கான வினாக்கள் அடங்கிய பல்தேர்வு சுருக்க வினாத்தாளாகும். நேரம் 1¼ மணித்தியாலம். மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.*

***2 ஆவது வினாத்தாள்.*** *- விடயதானம் தொடர்புடைய அறிவை அளவிடல்.- இது தீர்மானிக்கப்பட்ட விடயப்பரப்புடன் சம்பந்தமான அறிவை அளவிடுவதற்காக நடாத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தான் விண்ணப்பிக்கும் பதவி அல்லது பதவிகளுக்குச் பொருத்தமான வகையில் கீழ்க்காணப்படும் வினாத்தாள்களுள் தெரிவு செய்யப்படும் வினாத்தாள்களுக்கு தோற்றுவதற்கு அவகாசம் உண்டு. இவ்வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும் பல்தேர்வு வினாக்களையும் கொண்டது. நேரம் 2 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.*

***குறிப்பு***:- *பின்வரும் பாடவிதான சிபாரிசுகளிற்கு அமைய திறந்த பரீட்சையில் பாட விதானத்துடன் தொடர்புடைய பரீட்சையில் தத்துவார்த்த* (Theory) *அறிவிற்கு அதிகளவான முக்கியத்துவம் வழங்கப்பட்டுத் தயாரிக்கப்படும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்திற்கு அமைய பரீட்சை நடாத்தப்படும்.*

**ஒவ்வொரு பதவியோடும் தொடர்பான பாட விதான விதப்புரைகள் கீழே தரப்பட்டுள்ளன :**

*1.* ***உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிக்கான வினாத்தாள்.*** *- விண்ணப்பதாரர்களின் விருப்பப்படி கீழே (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பிரிவுகளுள் ஒரு பிரிவுக்கு மாத்திரம் விடையளித்தல் வேண்டும் :*

*(அ)* ***பிரிவு:***

1. ***விவசாயத் தாவரவியல்.*** *- பயிர்களின் பாகுபாட்டியல் கோட்பாடு, பயிர்களின் வளர்ச்சி மற்றும் உடற்றொழிலியற் கோட்பாடுகள்.*

2. ***பிறப்புரிமையியலும், தாவர இனவிருத்தியும்.*** *- மெண்டலின் விதிகள், குடிசன பிறப்புரிமையியல், விகாரித் தூண்டல் பிறப்புரிமையியல், கலங்களின் பிறப்புரிமையியல், அளவறிப் பிறப்புரிமையியல், தாவர இனவிருத்திக் கோட்பாடு, தாவரக் கரு மூலவளங்களைப் பாதுகாத்தலும், உயிரினப் பல்லினத் தன்மையும், மகரந்தச் சேர்க்கை மற்றும் இனவிருத்தி எண்ணக்கருக்களும், ஒவ்வாமை, பெரிய மற்றும் கலப்பற்ற வரிசைத் தெரிவு, பரவலாக உபயோகிக்கப்படும் இனவிருத்தி முறைகளும், தற்போதைய போக்குகளும்.*

3. ***தாவர நோயியல்.*** *- நோயை உருவாக்கும் உயிர் வகைகள், நோய்த் தொற்றல், இவற்றிற்குத் தாவரங்கள் காட்டும் தூண்டற்பேறு, தொற்றும் முறைகள், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தத்துவங்கள், தாவர நோயியலிலும், நோய்க் கட்டுப்பாட்டிலும் தற்போதைய போக்குகள், நோயைத் தீர்மானிக்கும் தொழில் நுட்ப முறைகள், நோய் அறிகுறி விஞ்ஞானம், “கொக்” இன் எண்ணக்கருக்கள், நோய்களைக் கண்டுபிடிக்கும் புதிய தொழில்நுட்ப தற்போதைய போக்கு, நோயைக் கண்டுபிடிப்பதில் புதிய தொழில்நுட்ப முறைகளும்* (ELISA), *தற்போதைய போக்குகளும்.*

4. ***பூச்சியியல் கோட்பாடுகள்.*** *- விலங்கு பாகுபாட்டு கோட்பாடுகள், பூச்சிகளின் வகைப்படுத்தல்கள்,* (Types of insects) *வாழ்க்கைத் தகவல்களும், சேதங்களும், பூச்சித் தாக்கங்களின் பொருளாதார முக்கியத்துவம், பூச்சிகளின் இனப்பெருக்கம் மற்றும் அவற்றின் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.*

5. ***விதைத் தொழில்நுட்பம்.*** *- விதை உடற்றொழிலியல், விதைக்கட்டமைப்பு, உறங்குநிலை, முளைதிறன், வாழ்தகவு, விதைத் தூய்மைக்கான பரிசோதனை, விதை உற்பத்திக் கட்டங்கள், விதை அத்தாட்சிப்படுத்தல், விதை களஞ்சியப்படுத்தல்.*

6. ***தாவர இழைய வளர்ப்பு விஞ்ஞானம்.*** *- கோட்பாடுகள், இழைய வளர்ப்பிற்கான வசதிகளும், தேவைகளும், ஊடகங்கள், இழைய வளர்ப்பு நடுகை முறைகள், பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள், முதலுரு வளர்ப்பு முறைகள், விகாரிகளை உருவாக்கல், முளையங்கள் பாதுகாத்தல், பரிசோதனைக் குழாய் கருக்கட்டல், பிறப்புரிமையியல் கூர்ப்பு, உறைநிலைப் பாதுகாப்பு.*

7. ***விவசாய இரசாயனவியல்.*** *- உயிரியல் இரசாயன கோட்பாடுகளும், விவசாயத்தில் உயிரியல் இரசாயனவியலின் நடைமுறைப் பயன்பாடுகளும், உணவு இரசாயனத் தத்துவங்களும், விவசாயத்தில் உணவு இரசாயனத்தின் நடைமுறைப் பயன்பாடுகளும், பகுப்பாய்வு இரசாயனவியலின் தத்துவங்களும், விவசாயத்தில் அதன் நடைமுறைப் பயன்பாடுகளும்.*

*அல்லது*

(ஆ) ***பிரிவு:***

1. ***பயிராக்கவியல்.***- *விவசாயக் காலநிலை விஞ்ஞானம், சூழலியல், காணி அபிவிருத்தி, நிலத்தைப் பண்படுத்தல், பயிர் விருத்தியும் மற்றும் உடற்றொழிலியல் கோட்பாடுகளும், பயிர் வளர்ச்சியின் அளவீடுகள், விளைச்சல் நியமங்கள், பசளைச் சிபாரிசுகளும், வினைத்திறனான பயன்பாடும், களைகளின் உயிரியலும், அவற்றின் கட்டுப்பாடும், நீர்ப்பாசன முறைகளின் கோட்பாடுகள், பயிர், மண் மற்றும் நீர் ஆகியவற்றின் தொடர்புகளின் கோட்பாடுகள்.*

2. ***பயிர் விஞ்ஞானம்.***- *நெல், மேட்டு நிலத் தானியங்கள், அவரைத் தானியங்கள், கிழங்குப் பயிர்கள், மறு வயற்பயிர்கள் ஆகியவற்றின் உடற்றொழிலியல், வளர்ச்சியும், இனப்பெருக்க முறைகளும், நடுகை முறைகள், பயிர் முகாமைத்துவத்தின் பௌதீக, இரசாயனம் மற்றும் உயிரியல் முறைகள், விஞ்ஞான ரீதியிலான புற்தரையை உண்டாக்குதல் மற்றும் அவற்றின் முகாமைத்துவமும், அரிமரப் பலகை உற்பத்தியும், பழங்களின் உற்பத்தித் தத்துவங்களும்.*

3. ***மண்ணியல்.***- *மண் உருவாகல், மண்ணின் பௌதிக, இரசாயன பண்புகள், பயிர்ச்செய்கைக்குத் தொடர்புள்ள மண்ணிற் காணப்படும் பிரச்சினைகள், மண் வள முகாமைத்துவம், திரவப் பசளை முகாமைத்துவம், தாவரப் போசாக்கு, மண் வகைப்படுத்தல் கோட்பாடுகள்.*

4. ***பிறப்புரிமையியலும் மற்றும் தாவர இனவிருத்தியும்.***- *தத்துவங்கள், மெண்டலின் விதிகள், குடித்தொகை பிறப்புரிமையியல், விகாரம், முதலுரு பிறப்புரிமையியல், கலங்களின் பிறப்புரிமையியல், தாவர இனவிருத்தியின் கோட்பாடுகள், தாவரக் கரு மூல வளங்களைப் பாதுகாத்தலும், உயிரினங்களின் பல்லினத் தன்மையும்.*

5. ***தாவர நோயியல்.***- *தாவரங்களின் தொற்றுக்கள் ஏற்படல், தொற்றுக்களுக்குத் தாவரங்களின் தூண்டற்பேறு, உயிரியல் கட்டுப்பாடு, நோய் கட்டுபாட்டில் நவீன போக்குகள்*

6. ***பூச்சியியற் கோட்பாடுகள்.***- *வினாத்தாளின் 4வது உப பந்தியின் கீழ் தரப்பட்டுள்ளது.*

7. ***வெளிக்கள ஆராய்ச்சி கோட்பாடுகள், புள்ளிவிபரவியற் கோட்பாடுகள்.***- (Statistical Principles), *இலங்கையின் விவசாயத் துறைகளில் முக்கியமான புள்ளி விபரங்கள் பற்றிய அறிவு.*

8. ***பூச்சியியல்.***- *விவசாயத்தில் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகள், அவற்றின் பாகுபாடுகள், புற, அக பண்புகள், பல்வேறு தொகுதிகளில் நிர்மாணமும் மற்றும் அவற்றால் மேற்கொள்ளப்படும் செயல்களும், பீடைகள் கட்டுப்பாடு, பீடைப் பாதிப்புகளின் முக்கியத்துவம், பீடைகளை இனங் காணல், அவற்றின் பாதிப்புகளும் கட்டுப்பாடும், ஒன்றிணைந்த பீடைகள் கட்டுபாடு.*

9. ***நுண் உயிரினவியல்.***- *நுண்ணுயிர்களும் விவசாயச் சுற்றாடலும், விவசாயத்தில் உயிரியற் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள், மண் உயிரினங்களும், விவசாயத்தில் அவற்றின் செல்வாக்குகளும்.*

10. ***உயிரின புள்ளிவிபரவியலும், பிரயோக புள்ளிவிபரவியலும்.***- *புள்ளிவிபரவியல் சம்பந்தமான அடிப்படை அறிவு, விவசாய ஆராய்ச்சி, திட்டமிடல் பகுப்பாய்வு, தகவல்கள் பெற்றுக் கொள்ளலும் அவற்றைப் பகுப்பாய்வு செய்தலும்.*

***குறிப்பு.***- *திறந்த ஆட்சேர்ப்புகள் மூலம் உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் எல்லா பரீட்சார்த்திகளும் மேலே (அ) அல்லது (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள 2 பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவுக்கு மட்டும் விடையளித்தல் கட்டாயமாகும்.*

***3. உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய அபிவிருத்தி) பதவிக்கான வினாத்தாள் :***

1. ***பொது விவசாயம்.***- *இலங்கையின் காலநிலை வலயம், காணி அபிவிருத்தி, நிலம் பண்படுத்தல், கருவிகள், பயிர் ஸ்தாபித்தலும், அதற்கு அவசியமான இயந்திராதிகளும், மண்ணும், மண் வளமும், நாற்று மேடையும, நாற்று மேடை முகாமைத்துவமும், நடுகைப் பொருட்கள், பீடைக்கட்டுப்பாடு, தாவர பாதுகாப்பு, உபகரணங்கள், பயிர்ச் செய்கை முறைகள், நீர்ப்பாசன முறைகள், ஒன்றிணைந்த விவசாயச் செய்கை, பாதுகாக்கப்பட்ட விவசாயம், நுண் நீர்ப்பாசன முறைகள், அறுவடை செய்தலும், அறுவடை செய்யும் உபகரணங்களும், அறுவடைக்குப் பிந்திய இழப்புகள், பண்ணை உற்பத்திகளைப் பதனிடுதல், விசேடமான பிரதேசங்களில் பயிரிடப் பொருத்தமான மரக்கறி வகைகள், பழங்கள், அவரைத் தானியங்கள், தானியங்களைத் தெரிவு செய்வதில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள், ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாடு, ஒன்றிணைந்த தாவரப் போசாக்கு முறை, தாவரப் பாதுகாப்புச் சட்டம், மண் பாதுகாப்புச் சட்டம்.*

2. ***பயிர் உற்பத்தி.***- *பயிராக்கவியல், விவசாயக் காலநிலையும், சுற்றாடலும், காணி அபிவிருத்தி மற்றும் நிலப்பண்படுத்தல், பயிர்களின் வளர்ச்சிக் கோட்பாடுகளும், தாவர உடற்றொழிலியலும், பயிர்களின் வளர்ச்சியை அளவிடல், விளைச்சல் கூறுகள், பசளைச் சிபாரிசும், அவற்றின் வினைத்திறனும், களைகளின் உயிரியலும், கட்டுப்பாடும், நீர்ப்பாசனம், பயிர், நீர் என்பனவற்றிற்கிடையிலான தொடர்புகளின் கோட்பாடு.*

3. ***வயற் பயிர்கள்.***- அறிமுகம், சுற்றாடல் தேவைகள், தாவர இனங்களும், வர்க்கங்களும், தாவர வளர்ச்சியின் உடற்றொழிலியல், விளைச்சலைத் தீர்மானிப்பதில் உடற்றொழிலியல் ரீதியான கோட்பாடுகள், நெல்லின் பயிராக்கவியல், பயிர் முகாமைத்துவமும் உற்பத்தியும், மேட்டுநிலத் தானியங்கள், அவரைத் தானியங்கள், கிழங்குப் பயிர்கள், ஏனைய முக்கியமான வயற்பயிர்கள் (புகையிலை, வெங்காயம், நார் பயிர்கள் மற்றும் எண்ணெய்ப் பயிர்கள்).

4. ***பயிர் முகாமைத்துவம்.***- இடைப்பயிர்ச்செய்கை, விளைச்சலை அறுவடை செய்தலும், பதனிடலும்.

5. ***பூங்கனியியற் பயிர்கள் உற்பத்தி.***- பழப்பயிர்ச்செய்கை, போசாக்குப் பெறுமதி, சமூக மற்றும் பொருளாதார காரணிகள், ஆரம்பமும் விஸ்தரிப்பும், சுற்றாடல் தேவைகள், பயிர்ச்செய்கை முறைகள், புதிய தொழில்நுட்ப முறைகளின் பாவனை.

6. ***பழங்கள், மரக்கறி மற்றும் மலர்ச்செய்கை.***- நாற்றுமேடைப் பரிபாலனம், தோட்டப் பரிபாலனம், பயிர்களை ஒட்டிய புதிய தொழில்நுட்பங்களும், பயிர்ச்செய்கை முறைகளும், பழங்கள், மரக்கறிப் பயிர்களை மேம்படுத்தல், பழங்கள், மரக்கறி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறை, அறுவடைக்குப் பின்னான இழப்புக்கள், பழங்கள், மரக்கறி ஆகியவற்றுக்கு அறுவடைக்குப் பின்னான இழப்புக்களைத் தவிர்த்தல், உயிரியல் தொழில்நுட்பம், பழங்களுக்கும், மரக்கறிகளுக்கும் தேசிய மற்றும் வெளிநாட்டு சந்தைகள், நவீன கட்டுப்பாடுகளும், எதிர்கால உபாயமார்க்கங்களும், மரக்கறிச் செய்கைக்கான தேவைகள், விற்பனை செய்தல், மலர்ச்செய்கை கைத்தொழில், இனப்பெருக்கத் தொழில்நுட்பங்கள், பயிர்ச்செய்கை முறைகள், உகந்த நிலைமைகள், தரைத்தோற்ற அலங்காரக் கோட்பாடுகள்.

7. ***விவசாய விரிவாக்கமும், பயிற்சியும்.***- விவசாய விரிவாக்கத்தின் வரைவிலக்கணமும், நோக்கங்களும், விவசாய அபிவிருத்தியும் விவசாய விரிவாக்கமும், நவீன முறையைப் பின்பற்றலும், நவீன முறையின் பரவலும், தொடர்பாடல், விரிவாக்கக் கற்பித்தல் முறைகள், இலங்கையில் பயன்படுத்தப்படும் விரிவாக்க அனுகுமுறைகள். ஆராய்ச்சி விரிவாக்க தொடர்புகள், விரிவாக்கத் திட்டங்களைத் திட்டமிடல், சாராம்சமும், மதிப்பீடும், இலங்கையில் விவசாய விரிவாக்கத்துடன தொடர்புடைய நிறுவனங்கள், வளர்ந்தோர் கல்வி, பயிற்சி வழங்கும் நடைமுறைகள், பயிற்சித் தேவையை இனங்காண பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகள், பாடங்களைத் திட்டமிடல், பயிற்சியை மதிப்பிடல், பயிற்சியின்போது கட்புல, செவிப்புல உபகரணங்களைப் பயன்படுத்தல்.

8. ***விதைத் தொழில்நுட்பம்.***- விதை உடற்றொழிலியல், விதைக் கட்டமைப்பு, விதை உருவவியல், விதை முளைத்தல், முளைதிறன், விதைப் பரிசோதனை, விதை முளைதிறனையும், விதைத் தூய்மையையும் பரிசோதித்தல், விதை உற்பத்திக் கட்டங்கள், விதை அத்தாட்சிப்படுத்தல், விதைகளைச் சேமித்தல்.

9. ***தேனீ வளர்ப்பு.***- தேனீக் குடிலில் உள்ள தேனீ வகைகளும், விதை வகைகளும், தேனீப் பெட்டிகளின் பாகங்கள், தேனீக் குடில்களைப் பிடித்தல், திரளாகக் குலைந்து செல்லல், தேனீக் குடியைப் பாதிக்கும் நோய்களும், பீடைகளும்.

**4. உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) பதவிக்கான வினாத்தாள் :**

5.

1. ***விவசாய உற்பத்திப் பொருளியல் மற்றும் பண்ணை முகாமைத்துவம்.***- விவசாய உற்பத்தியில் பண்ணை முகாமைத்துவத்தின் முக்கியத்துவம், அடிப்படை எண்ணக்கருக்கள், உற்பத்தித் தொழிற்பாடு, உற்பத்தித் தொழிற்பாடுகளின் வடிவங்கள், உற்பத்திச் செயற்பாடுகளின் வடிவம், உற்பத்தி நடுநிலை வக்கிரமான வேகம், சமவருமான கோடு, உழைக்கும் வளங்களின் சேர்க்கைகளும், செலவுகளை இயன்றவரை குறைக்கும் கோட்பாடும், குறைவடையும் விளைச்சல் கோட்பாடுகள், மாற்றுப் பொருள் மற்றும் வருமான எதிர் விளைவுகள், விவசாயத்தில் உள்ள இடர்களிற்கும், சந்தேகத்துக்கிடமானவைகளிற்கு முகம் கொடுப்பதற்கு உற்பத்தியைத் தயார் செய்யும் பாங்கு மற்றும் பல்வகைப்படுத்தல், விவசாய விலைகள் தீர்மானிப்துடன் தொடர்புடைய விலைக்கோட்பாடு, பயிர்கள் மற்றும் கால்நடைகள் இணைப்புகளை மதிப்பீடு செய்தல், பண்ணை அளவு மற்றும் பொருளாதாரப் பலன், குடும்பப் பண்ணைகளின் முக்கியத்துவம் மற்றும் ஒப்பீட்டு நன்மைகள் தொடர்பான கோட்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கலின் பலங்கள் மற்றும் பலவீனமான விடயங்களைத் தீர்மானிப்பதில் அறிக்கைகளில் உள்ள முக்கியத்துவம் மற்றும் உச்ச பயன் மாதிரிகளுக்காக இத்தகவல்களை உள்ளடக்கல்.

2. ***விவசாய சந்தைப்படுத்தல்.***- சந்தைப்படுத்தல் கோட்பாடு, உற்பத்தியிலும், விற்பனையிலும் தொடர்புடைய ஒப்பீட்டு முக்கியத்துவம், இலங்கையில் விற்பனை சம்பந்தமாக பணியாற்றும் நிறுவனங்கள், விற்பனைக்கான மார்க்கங்களை விருத்தி செய்வதில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் அவ்வாறான நிறுவனங்களின் பொறுப்புகள், இலங்கையின் விவசாயப் பொருட்களை விற்பனை செய்வதில் எதிர்கொள்ள நேரிடும் தடைகள் மற்றும் விற்பனை வினைத்திறனை மேம்படுத்துவதுடன் தொடர்புடைய கோட்பாடுகள்.

3. **காணிப் பொருளியல்.**- காணிப் பயன்பாட்டில் பொருளியல் ரீதியிலான எண்ணக்கருக்கள் செல்வாக்கு செலுத்தும் விதம், இலங்கையில் காணிகளுக்கான கேள்விகளும் வழங்கல்களும்,இலங்கையில் காணிப் பாவனை நடவடிக்கைகள் திட்டமிடப்படும் விதம், இலங்கையில் விவசாய குடியேற்றங்கள் நிறுவுதல் மற்றும் மக்களைக் குடியேற்றும் வேலைத்திட்டத்தின் முக்கியத்துவம்.

***2 ஆம் பின்னணைப்பு***

**மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளும் பாடவிதானமும்**

***1 ஆம் வினாத்தாள்.*** - நுண்ணறிவுப் பரீட்சை வினாத்தாள்.- இது மொழி, கணித மற்றும் தர்க்கிக்கும் ஆற்றல்களைப் பரிசீலித்துப் பார்ப்பதற்கான வினாக்கள் அடங்கிய ஒரு பல்தேர்வு வினாத்தாள் ஆகும். காலம் 1 1/4 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

***2 ஆம் வினாத்தாள்.*** - விடய அறிவை அளவிடுதல்.- இது குறிப்பிடப்பட்டுள்ள பாடத் துறை பற்றிய அறிவைப் பரிசீலிப்பதற்காக நடத்தப்படும் பதவிக்கான ஒரு எழுத்து மூல உளர்சார்புப் பரீட்சையாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரினாலும் தான் விண்ணப்பிக்கின்ற பதவிக்கு அல்லது பதவிகளுக்கு பொருத்தமான விதத்தில் அவர்கள் கீழ்காணும் வினாத்தாள்களில் தேர்ந்தெடுக்கப்படும் வினாத்தாள்களுக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்த வினாத்தாள் குறுகிய வினாக்களையும் பல்தேர்வு வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். நேரம் 2 மணித்தியாலங்கள். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

***குறிப்பு.*** - கீழ்காணும் பாடவிதானத்திற்கு அமைய மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சையில் விடய வினாத்தாள் வெளிக்கள அனுபவ ரீதியான அறிவுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும். பரீட்சைகள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் விதத்திற்கு அமைய பரீட்சை நடத்தப்படும்.

**ஒவ்வொரு பதவிக்குரிய பாடவிதானங்கள் பின்வருமாறு காணப்படும் :**

1. ***விவசாய ஆராய்ச்சித் துறைக்கான வினாத்தாள்.*** - விண்ணப்பதாரர்களினது விருப்பத்தின் பேரில் கீழ்காணும் (அ), (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிக்கப்படுதல் வேண்டும் :

(அ) **பகுதி**:

1. ***விவசாயத் தாவரவியல்.*** - பயிர்களின் பாகுபாட்டுத் தத்துவங்கள், தாவரங்களின் வளர்ச்சி மற்றும் உடற்றொழிலியல் கோட்பாடுகள்.

2. ***பாரம்பரிய தாவர இனப்பெருக்கம்.*** - மென்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், பாரம்பரிய அணு மாற்றம், இளையங்கள் வளர்ப்பு, கணிய மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடுகள், மரபணு வளங்கள் பாதுகாப்பு, உயிர் பல்வகை தன்மை, மகரந்த சேர்க்கை இனப்பெருக்கக் கோட்பாடுகள், விகாரமடைதல், கலப்பின மற்றும் கலப்பினமற்ற தாவரங்கள், பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற தாவர இனப்பெருக்க முறைகள் மற்றும் தற்போதைய போக்குகள்.

3. ***தாவர நோயியல்.*** - நோய்க் கிருமிகளின் வகை, தொற்றுகின்ற விதம், இவற்றைக் கட்டுப்படுத்தும் கோட்பாடுகள், தாவர நோயியலும் நோய்க் கட்டுப்பாடும் பற்றிய தற்போதைய போக்குகள், நோயைக் கண்டறியும் நுட்பங்கள், நோய் பண்பியல்பு, கொக்கின் கருதுகோள் பிரயோகம், நோய் கண்டறியும் நவீன நுட்பங்கள் (ELISA) மற்றும் தற்போதைய போக்குகள்.

4. ***பூச்சியல் அடிப்படைக் கோட்பாடு.*** - விலங்கியல் பாகுபாட்டுக் கோட்பாடுகள், கிருமி வகைகளின் இயல்பு, வாழ்க்கை வட்டத் தகவல்கள், பாதிப்புகள், பூச்சி அழிவின் பொருளாதார முக்கியத்துவம், பூச்சிகளின் குடித்தொகை, அழிவு பற்றிய மதிப்பீடு.

5. ***விதைத் தொழில்நுட்பம்.*** - விதைப் பௌதீகவியல், விதைக் கட்டமைப்பு, செயலற்று முளைத்தல், உயிர் வாழ்தல், நம்பகத்தன்மையும் தூய்மை பற்றிய சோதனையும், விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகளைச் சான்றுபடுத்தல், விதைகளைக் களஞ்சியப்படுத்தல்.

6. ***இழைய வளர்ப்பு.*** - கோட்பாடுகள், இளைய வளர்ப்பு வசதிகளும் தேவைகளும், மூலங்கள், இளைய வளர்ப்பு முறைகளின் பிரயோகங்கள், முதலுரு தாவர வளர்ப்பு முறை, விகாரமடைந்து புதிதாகத் தோன்றுதல், கரு மீட்பு, செயற்கைக் கருத்தரிப்பு, மரபணுப் பரிணாமங்கள், ப்ராக் பாதுகாப்பு.

7. ***விவசாய இரசாயனவியல்.*** - உயிர் இரசாயனவியல் கோட்பாடுகள், விவசாயத்தில் உயிர் இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், உணவு இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாய உணவு இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், பகுப்பாய்வு ரீதியான இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாயத்தில் காணப்படும் செயல்முறைப் பிரயோகங்கள்.

அல்லது

(ஆ) **பகுதி**

1 ***பயிராக்கவியல்.***- விவசாயக் காலநிலையியல், சுற்றாடல், நில அபிவிருத்தி, நிலப் பண்படுத்தல், பயிர் வளர்ச்சியும் பௌதீகவியலும் பற்றிய கோட்பாடுகள், பயிர் வளர்ச்சி அளவீடு, அறுவடைச் சுட்டிகள், பசளையின் சிபாரிசும் வினைத்திறனும், களை உயிரியலும் கட்டுப்பாடும், நீர்ப்பாசன முறைகள் பற்றிய கோட்பாடுகள், பயிர்ச் செய்கை மண் மற்றும் நீர் தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

2. ***பயிர் விஞ்ஞானம்.***- நெல், மேட்டுநிலத் தானியப் பயிர்கள், பயரினங்கள், கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனைய வயல் பயிர்கள் என்பவற்றின் பௌதீகவியல், பரவல் முறைகள், தாவர நடுகை முறைகள், பயிர்கள் பராமரிப்பு பௌதீகவியல், இரசாயன உயிரியல் முறை, விஞ்ஞான ரீதியில் செயற்கைப் புல் நிலங்களை அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், மர உற்பத்திகளும் பழ உற்பத்திகளும் பற்றிய கோட்பாடுகள்.

3. ***மண்ணியல்.***- மண் உருவாக்கம், மண்ணின் பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகள், பயிர்கள் சம்பந்தமான மண்ணிலுள்ள பிரச்சினைகள், மண் வளப் பராமரிப்பு, தாவரப் போஷணை, தாவரப் போஷணை வகைப்படுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

4. ***பாரம்பரிய தாவர இனப்பெருக்கம்.***- மென்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், விகாரங்கள், மூலக்கூறு மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடு, தாவர வளங்கள் பாதுகாப்பு மற்றும் உயிர் பல்வகைமை.

5. ***தாவர நோயியல்.***- தாவர நோய்கள், நடுகைக்கன்றுகள் நோய்த்தொற்றுக்களுக்கு ஈடுகொடுக்கும் விதம், உயிரியல் கட்டுப்பாடு, நோய்க் கட்டுப்பாட்டு நவீனப் போக்குகள்.

6. ***பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடுகள்.***- (அ) வினாத்தாள் 4 ஆம் அறிவுரைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

7. ***கள ஆராய்ச்சிக் கோட்பாடுகள், புள்ளிவிபரவியல் கோட்பாடுகள்.***- (Statistical Principles), இலங்கையின் விவசாயத் துறையினது முக்கியமான புள்ளிவிபரங்கள் பட்டியல் பற்றிய அறிவு.

8. ***பூச்சியியல்.***- விவசாயத்தில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகள், அவற்றின் வகுதிகள், உள்ளக மற்றும் வெளியகப் பண்புகள், பல முறைமைகளின் கட்டமைப்பும் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளும், பூச்சிகள் கட்டுப்பாடு, பூச்சிகளின் அழிவு முக்கியத்துவம், கிருமிகளை இனங்காணுதல், அவற்றின் பாதிப்புகளும் கட்டுப்பாடும், ஒன்றிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு.

9. ***நுண்ணுயிரியல்.***- நுண்ணங்கிகள் மற்றும் விவசாயம் சார்ந்த சுற்றாடல், உயிரியல் தொழில்நுட்ப விவசாயத்திற்கான பிரயோகம், மண்ணிலுள்ள நுண்ணங்கிகளும் விவசாயத்தின் மீது அவற்றின் தாக்கங்களும்.

10. ***உயிரினப் புள்ளிவிபரவியலும் பிரயோகப் புள்ளிவிபரங்களும்.***- புள்ளிவிபரவியல் சம்பந்தமான அடிப்படை அறிவு, விவசாய ஆராய்ச்சி, திட்டப் பகுப்பாய்வு, தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தகவல் பகுப்பாய்வுகள்.

**குறிப்பு**.- மட்டுப்படுத்தப்பட்டப் போட்டிப் பரீட்சையினூடாக உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் சகல பரீட்சாத்திகளும் மேற்குறித்த (அ) அல்லது (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஏதாவது ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிப்பது அவசியமாகும்.

II **விவசாய அபிவிருத்தித் துறைக்கான வினாத்தாள்** :

1. ***பொது விவசாயம்.***- இலங்கையின் காலநிலை வலயங்கள், காணிகள் அபிவிருத்தி, நிலத்தைப் பண்படுத்தல், உபகரணங்கள், பயிர்கள் தாபிப்பு அதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள், மண்ணும் மண் வளமும், நாற்று மேடைகளும் நாற்றுமேடைப் பராமரிப்பும், தாவர மூலப்பொருட்கள், பூச்சிகள் கட்டுப்பாடு, தாவர நடுகைக் கன்றுகள் பாதுகாப்பு, உபகரணங்கள், பயிர்ச் செய்கை முறை, நீர்ப்பாசன முறை, ஒன்றிணைந்த விவசாயம், பாதுகாப்பான விவசாயம், நுண் நீர்ப்பாசன முறை, அறுவடையும் அறுவடை உபகரணங்களும், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பண்ணை சார்ந்த உற்பத்திகள் தயாரிப்பு, விஷேட பிரதேசங்களில் பயிரிடுவதற்குப் பொருத்தமான மரக்கறிப் பயிர்கள், பழப் பயிர்கள், உலர் வலயப் பயிர்கள் மற்றும் தானியத்தைத் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள், ஒன்றிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு, ஒன்றிணைந்த தாவர நடுகைக்- கன்றுகள் முறைமை, தாவரங்கள் பாதுகாப்பு பற்றிய சட்டம், மண் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள்.

2. ***பயிர் உற்பத்தி.***- தாவரவியல், விவசாயக் காலநிலை மற்றும் சுற்றாடல், நில அபிவிருத்தி மற்றும் பண்படுத்தல், பயிர்களின் வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் நடுகைக்கன்றுகளின் பௌதீகவியல், பயிர்களின் வளர்ச்சியை அளவிடுதல், அறுவடைச் சுட்டிகள், பசளைகளின் சிபாரிசு, பசளைகளின் வினைத்திறன், களைத் தாவரங்களின் உயிரியல் கட்டுப்பாடு, நீர்ப்பாசனம், விவசாயவியல், பயிர்கள் மற்றும் நீர் என்பவற்றுக்கு இடையிலுள்ள தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

3. ***களப் பயிர்கள்.*** - அறிமுகம், சுற்றாடல் தேவைப்பாடுகள், தாவர வகுதிகள் மற்றும் இனங்கள், நடுகைக்கன்று வளர்ச்சி, பௌதீகவியல், விளைச்சலை நிர்ணயிக்கும் பௌதீக விஞ்ஞான கோட்பாடுகள், நெற் பயிரின் விவசாயவியல், பயிர் பராமரிப்பு மற்றும் உற்பத்திகள், மேட்டுநிலத் தானியங்கள், பயரினங்கள், கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனைய முக்கியமான களப் பயிர்கள் (புகையிலை, வெங்காயம், நார் தாவரங்கள் மற்றும் எண்ணெய் தரும் பயிர்கள்).

4. ***பயிர்கள் பராமரிப்பு.*** - இடைப் பயிர்ச் செய்கை, அறுவடை மற்றும் பதனிடுதல்

5. ***தோட்டப் பயிர்கள் உற்பத்தி.*** - பழங்கள் உற்பத்தி, போஷணை பெறுமானம், சமூகப் பொருளாதாரக் காரணிகள், ஆரம்பம் மற்றும் பரிணாமம், சுற்றாடல் தேவைப்பாடுகள், பயிர்ச் செய்கை முறை, நவீன தொழில்நுட்ப முறைகளின் பாவனை.

6. ***பழ வர்க்கங்கள், மரக்கறி வகைள் மற்றும் பூக்கள் உற்பத்தி.*** - நாற்றுமேடைப் பராமரிப்பு, தோட்டப் பயிர்கள் பராமரிப்பு, பயிர்கள் மைய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ச் செய்கை முறைகள், பழப் பயிர்களினதும் மரக்கறிப் பயிர்களினதும் பயிர்ச் செய்கை மேம்பாடு, பழ வர்க்கங்களையும் மற்றும் மரக்கறி வகைகளையும் அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறைகள், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பழ வர்க்கங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுதல், பல்லுயிரினத் தொழில்நுட்பம், பழ வர்க்கங்களுக்கும் மரக்கறி வகைகளுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிலவும் சந்தை வாய்ப்புக்கள், நவீன வரையறைகள் மற்றும் எதிர்காலத் தந்திரோபாயங்கள், மரக்கறி உற்பத்திற்கான தேவைகள், மரக்கறி வகைகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறைகள், சந்தைப்படுத்தல், பூ உற்பத்தி சார்ந்த கைத்தொழில்கள், விளம்பரத் தொழில்நுட்பம், பயிர்ச் செய்கை முறைகள், உன்னத நியமங்கள், நில அழகுபடுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

7. ***விவசாய விஸ்தரிப்பும், பயிற்சியும்.*** - விவசாய விஸ்தரிப்பு பற்றிய வரைவிலக்கணம் அவற்றின் குறிக்கோள்கள், விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தி விவசாய விஸ்தரிப்பு, கண்டுபிடிப்புகளைப் பின்பற்றல் மற்றும் பரப்புதல், தொடர்பாடல், விஸ்தரிப்பு பற்றி போதிக்கும் முறைகள், இலங்கையில் பயன்படும் விஸ்தரிப்பு அணுகுமுறைகள், ஆராய்ச்சி விஸ்தரிப்பு சம்பந்தமான தொடர்புகள், விஸ்தரிப்பு சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடல், மீளாய்வு மற்றும் மதிப்பீடு, இலங்கையின் விவசாய விஸ்தரிப்பு மற்றும் அதனுடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், முதியோர் கல்வி, பயிற்சி சார் நடைமுறைகள், பயிற்சி சார்ந்த தேவைப்பாடுகளைக் கண்டறிந்துகொள்ளும் பொருட்டு பயன்படும் பல வழிமுறைகள், பாடத் திட்டங்களைத் தயாரித்தல், பயிற்சிகள் பற்றிய மதிப்பீடு, பயிற்சிகளுக்கான கற்புல செவிப்புல சாதனங்கள் பயன்பாடு.

8. ***விதைத் தொழில்நுட்பம்.*** - விதைகளின் பௌதீகவியல், விதைக் கட்டமைப்பு, விதையின் உருவமைப்புகள், விதை முளைத்தல், விதை முளை திறன், விதைகள் பரிசோதனை, விதைகள் முளை திறன் மற்றும் விதைத் தூய்மை பற்றிய பரிசோதனை, விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகள் சான்றுபடுத்தல், விதைகள் களஞ்சியப்படுத்தல்.

9. ***தேனீ வளர்ப்பு.*** - ஒரு தேன் கூட்டிலுள்ள தேனீக்கள் வகை மற்றும் தேன் வதைகள், தேனீ வளர்ப்புப் பெட்டிகளின் பாகங்கள், தேனீக்களைப் பிடித்து நிலைப்படுத்தல், கூண்டினுள் அடைத்து வளர்த்தல், வகைப்படுத்தல், ஒரு தேன் கூட்டிலுள்ள கிருமிகள் மற்றும் நோய்கள்.

III. **விவசாயப் பொருளியல் துறைக்கான வினாத்தாள் :**

1. ***விவசாய உற்பத்திகள் பொருளியல் மற்றும் பண்ணைகள் பராமரிப்பு.*** - விவசாய உற்பத்திப் பண்ணைகள் பராமரிப்பிலுள்ள முக்கியத்துவம், அடிப்படை எண்ணக்கரு, உற்பத்தித் தொழிற்பாடுகள், உற்பத்தித் தொழிற்பாடுகள் அமைப்பு, உற்பத்திப் பரப்புகள், ஏனைய ISO, ISO உயிர்ச்சாய்வு, ISO வருமான வழிகள், வளங்கள் இணைப்பு மற்றும் செலவுகளைக் குறைத்தல் பற்றிய கோட்பாடுகள், பிரதியீடு மற்றும் வருமான விளைவுகள், விவசாயத்திலுள்ள ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் என்பவற்றுக்கு முகம்கொடுப்பதற்கான உற்பத்தித் தயாரிப்பு நெகிழ்வு மற்றும் பல்லுயிரினத் தன்மை, விவசாயப் பொருட்களுக்கான விஷேட விலையை நிர்ணயிக்கும் தத்துவம், தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பவற்றின் இணைந்த கூறுகள் பற்றிய மதிப்பீடு, பண்ணை ஸ்தலங்கள் மற்றும் அளவு பயன், கூட்டுப் பண்ணைகளின் முக்கியத்துவம் மற்றும் ஒத்தீட்டு நன்மைகள் பற்றிய கோட்பாடுகள், பண்ணைகளின் பொறிமுறை சார்ந்த சக்தி மற்றும் பலவீனங்கள் முதலிய விடயங்களை நிர்ணயிக்கும் அறிக்கைகளிலுள்ள முக்கியத்துவம் மற்றும் அனுகூலப்படுத்தும் மாதிரிகளில் இந்தத் தகவல்களை உள்ளடக்குதல்.

2. ***விவசாய சந்தைப்படுத்தல்.*** - சந்தைப்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் உற்பத்தியினதும் சந்தைப்படுத்தலினதும் ஒத்தீட்டு ரீதியான முக்கியத்துவம், இலங்கையில் சந்தைப்படுத்தல் விடயத்துடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் வழிமுறைகளின் வளர்ச்சியில் விளைவுகளை எற்படுத்துவதில் அத்தகைய நிறுவனங்களின் பங்களிப்புகள், இலங்கையில் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குவதற்கு நேரிடுகின்ற பிரச்சினைகள் மற்றும் சந்தைப்படுத்தல் வினைத்திறன் மேம்பாடு பற்றிய கோட்பாடுகள்.

3. ***காணிகள் பொருளியல்.*** - பொருளாதார விஞ்ஞான எண்ணக்கருக்கள் நிலப்பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் விதங்கள், இலங்கையில் காணிகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல், காணிகள் பரிசீலனை விடயங்கள் இலங்கையில் திட்டமிடப்படும் விதங்கள், இலங்கையில் விவசாயக் குடியேற்றங்களைத் தாபித்தல் மற்றும் மக்களைக் குடியேற்றுதல் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவம்.

திருத்தம்

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில்/பதவிகளில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2014(2015)

"இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில்/பதவிகளில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2014(2015)" எனும் தலைப்பின்கீழ் 2015.07.30 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட 1926 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. இதன்படி வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் உள்நாட்டுப் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக பரீட்சைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2015.09.16 ஆந் திகதி எனத் திருத்தப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சித்ராங்கனீ வாகிஸ்வர,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
அஞ்சல் பெட்டி இல. 583,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 1,
2015, ஓகத்து 21.

8-747

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.